

# கத்தோலிக்க திருமறை



தரம்

9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஆய்த எழுத்து ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருமறை

## தரம்

## 9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முதலாம் பதிப்பு - 2018*

*பதிப்புரிமையுடையது.*

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 227/30, நிர்மாண மாவத்தை, நாவல வீதி, நுகேகொடையில்
அமைந்துள்ள நனிலா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තිළිණය ලෙසින් රජයෙන් මේ පොත ලදිමි
කියවා එයින් නැණ ගුණ එළි කර ගනිමි
මගෙ රට වෙනුවෙන් ම දෑ සම්පත් රකිමි
මේ පොත එන වසරේ වෙන කෙනකුට පුදමි

**அரசின் வெகுமதியாய் நூலிதனைப் பெற்றேன்**
**அறிவு பெருகிடவே நூலிதனைக் கற்பேன்**
**தாய் நாட்டின் வளமெனவும் நூலிதனைக் காப்பேன்**
**பல மாணவரும் பயின்றிடவே நூலிதையே அளிப்பேன்**

From the government, I received this as a gift
I'll read it, light up my knowledge and practise thrift
On my country's own behalf, I'll protect the national resources
And offer this book to another one as a fresh garland of roses



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமுகத்தில் காணப்படும் தொழில் வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான பல்வேறு மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமுகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக்கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை ஒழுங்காகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்த சகோதரர்களின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே அரசினால் இலவசப் பாடநூல்களை உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

உலகில் மிக வேகமாக மாறி வரும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதற்கும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஓர் அரசாக நாம் செயற்படுவது ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளோம் என்பதனாலேயாகும். இலவசக் கல்வியின் உச்ச பயனை அனுபவித்துக் கொண்டு நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியது அதனாலேயே ஆகும். இதற்காக இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகவும் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் என்பனவே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் மிகவும் கூடிய பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கூட இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

அகில விராஜ் காரியவசம்
கல்வி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

விஞ்ஞான, தொழினுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் மிக வேகமாக மாற்றமடைந்து செல்கின்றது. அதன் ஒரு விளைவாகவே தற்காலத்தில் கல்வியின் நோக்கங்கள் சிக்கலடைந் துள்ளன. தற்கால கல்வி உளவியல் ஆய்வு முடிவுகளின்படி, புதிய கல்வி இலக்குகளை அடைந்து கொள்வதற்குக் கலைத்திட்டம் மாற்றப்படுவது காலத்தின் தேவையாகும். அவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்கிணங்க பாடநூல்களை உருவாக்கி உங்கள் கைகளில் வழங்குவது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாகும். இதன்போது பாடத்திட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ள சகல விடயங்களையும் உள்ளடக்குவது மட்டுமன்றி அதற்கு அப்பால் உள்ள அறிவையும் உங்களுக்குப் பெற்றுத்தருவதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் விசேட கவனம் செலுத்துகின்றது.

நீங்கள் எதிர்கால உலகிற்கு மிகப் பொருத்தமானதொரு பிரஜையாவதற்கு அவசியமான அறிவு, திறன் விருத்தி மற்றும் மனப்பாங்கைச் சீராக்கிக் கொள்வதற்கு இதன்மூலம் இயலுமாக இருக்கும்.

புதிய பாடத்திட்ட மறுசீரமைப்புக்கிணங்க 2015 ஆம் ஆண்டு தரம் 6 மற்றும் தரம் 10 என்பவற்றிற்கும் 2016 ஆம் ஆண்டு தரம் 7 மற்றும் தரம் 11 என்பவற்றிற்கும் 2017 ஆம் ஆண்டு தரம் 8 இற்கும் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக 2018 ஆம் ஆண்டில் தரம் 9 இற்கும் புதிய பாடநூல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்படி 2018 ஆம் ஆண்டில் புதிய பாடத் திட்டத்திற்கிணங்க பாடநூலாக்கும் பணி நிறைவடைகின்றது.

பூரண ஆளுமை கொண்ட, செயற்திறன் மிக்க நற்பிரஜையாவதற்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் இந்நூல் உங்களுக்கு உதவும் என எண்ணுகின்றேன். இப்பாடநூலாக் கத்திற்குப் பங்களிப்புச் செய்த எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் உட்பட ஏனைய உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
*2017. 05. 02*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**திரு ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**திருமதி டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

பிரதிக் கல்வி ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## ஆலோசனைகள்

**மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை**

**மேதகு கலாநிதி ஒஸ்வெல்ட் கோமஸ் ஆண்டகை (ஓய்வு பெற்றவர்)**

**அருட்பணி தயா ஷெல்ட்டன் வெலிகட ஆராச்சி**

## இணைப்பாக்கம்

**திரு. சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திருமதி. ஆர். டி. விஜய விக்கிரம**

பிரதிக் கல்வி ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**அருட்பணி ஏ. ஆர். லொயிட் சாந்திகுமார்**

விரிவுரையாளர்

அக்குவைனாஸ் கல்லூரி

கொழும்பு - 8

**அருட்பணி. சூசையப்பு அன்ரனி பொன்சியன் அ.ம.தி**

உதவி விரிவுரையாளர் - சமயப்பிரிவு

தேசிய கல்வி நிறுவகம் - மகரகம.

**அருட்பணி பியால்.ஜானக பர்னாந்து**

பணிப்பாளர்

தேசிய கத்தோலிக்க மறைக்கல்வி மத்திய நிலையம், கொழும்பு - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருட்பணி. டி.எம்.டீ.ஏ.ஜுட்.தஸநாயக்க**

சிரேஷ்ட விரிவுரையாளர்

வயம்ப தேசிய கல்வியிற் கல்லூரி, பிங்கிரிய.

**அருட்பணி .எம்.ஜி. எல். பர்னாந்து**

உதவிக் கல்விப் பணிப்பாளர்

சமயப் பிரிவு - கல்வி அமைச்சு

## நூலாக்கக் குழு

**செல்வி. எ.கே.எஸ்.ஏன்ஜல்மேரி**

ஆசிரியர் (ஓய்வு)

**செல்வி.ஜே. பிலோமின்**

ஆசிரிய ஆலோசகர்

மட்டக்களப்பு வலயம்.

**செல்வி. டெய்சி இம்மகுலேற் ஜோசவ்**

ஆசிரிய ஆலோசகர்

கொழும்பு - நீர்கொழும்பு வலயம்.

**திரு.ரி.ஐ. ரங்கநாயகம்**

ஆசிரியர்

புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 3.

**அருட்சகோதரி என்.சி. மேரி நிமல்க்கா**

ஆசிரியர்

புனித ஜோசப் ஆண்கள் பாடசாலை, நுகேகொட.

**திரு. எஸ்.ஜி.கே.டீ.எல்.சி. பிரசாத்**

ஆசிரிய ஆலோசகர்

வலயக் கல்வி காரியாலயம் - ஹோமாகம.

**திருமதி.மரினி தம்பிகா பெரேரா**

ஆசிரிய ஆலோசகர்

கொழும்பு வடக்கு வலயக் கல்வி காரியாலயம் கொழும்பு - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துஷ்மன்தி தயா குமாரி த சில்வா**
ஆசிரியர் ஆலோசகர்
மினுவாங்கொடை வலயக் கல்வி காரியாலயம்.

**எம்.கே.எம்.ஐ.எஸ்.கே பர்னாந்து**
ஆசிரியர் ஆலோசகர் (ஓய்வு)

## பதிப்பாசிரியர் (மொழி)

**திரு இ.மகேந்திரன்**
ஆசிரியர்
நொவூட் தமிழ் மகா வித்தியாலயம்
நொவூட்.

## சரவை நோக்கு

**திரு எஸ். வடிவேல்**
ஆசிரியர்
இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்
இரத்தினபுரி.

## சித்திரம் அட்டைப்படம்

**திரு சத்திவேல் சத்தியசீலன்**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## கணினி வடிவமைப்பு

**செல்வி தர்மகுலேந்திரன் சசிரேகா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திரு ந.துஷாந்தன்**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள் | 1 |
| 2 | புதிய ஏற்பாட்டு நூல்களை வகைப்படுத்தல் | 9 |
| 3 | திருப்பாடல் | 13 |
| 4 | ஒத்தமை நற்செய்தி | 20 |
| 5 | யோவான் நற்செய்தி | 24 |
| 6 | மனிதன் பாவத்தில் விழுதல் | 28 |
| 7 | காயினும் ஆபேலும் | 34 |
| 8 | பெருவெள்ளமும் நோவாவுடன் உடன்படிக்கையும் | 39 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 நீதித் தலைவர்கள் 47

10 அரசர்கள் 53

11 நேர்மையான வாழ்வு 60

12 மனந்திரும்பி நான் வரும்வரை 67

13 ஒப்புரவு அருளடையாளம் 72

14 நோயில் பூசுதல் அருளடையாளம் 78

15 நோயில் பூசுதல் சடங்கு முறை 83

16 தமது வாழ்வைப் பாதுகாத்தல் 91




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 17 | அடுத்தவரின் உயிரைப் பாதுகாத்தல் | 95 |
| 18 | மோகபாவம் செய்யாதிருப்பாயாக | 102 |
| 19 | பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக | 105 |
| 20 | தூய வாழ்வுக்கு முன்மாதிரிகை தூய மரிய கொறற்றி | 108 |
| 21 | கேளுங்கள் கொடுக்கப்படும் | 113 |
| 22 | நல்லதையே வேண்டுவோம் | 118 |
| 23 | புகழ்பாக்கள் | 121 |
| 24 | செபத்தின் வகைகள் | 125 |
| 25 | ஆசிப்பா | 129 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

**ஆசிரியர்** : இன்று நாம் பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள் பற்றிக் கற்போம்.

**நோயல்** : ஆம் ரீச்சர். பழைய ஏற்பாட்டில் 46 நூல்கள் உள்ளன.

**ஆசிரியர்** : மிகவும் நல்லது நோயல்.
இந்த 46 நூல்களையும் இலகுவாகக் கற்பதற்கு அவற்றை வகைப் படுத்திக் கொள்ள முடியும்.
பிள்ளைகளே! உங்களில் யாராவது 119வது திருப்பாடலில் 105வது வசனத்தை வாசியுங்கள்.

**பீற்றர்** : என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!

**ஆசிரியர்** : மிகவும் நல்லது. உங்களில் யாராவது ஒருவர் எண்ணிக்கை நூலில் 6ம் அதிகாரத்தில் 24 தொடக்கம் 26 வரையுள்ள வசனங்களை வாசியுங்கள்.

**அன்ரனி** : ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக! இவ்வாறே அவர்கள் என் பெயரை இஸ்ரயேல் மக்களிடையே நிலைநாட்டுவர்; நானும் அவர்களுக்கு ஆசி வழங்குவேன்.

**ஆசிரியர்** : மகனே! இவ்வாறு எல்லாப் பிள்ளைகளும் திருவிவிலியத்திலுள்ள நூல்களின் ஒழுங்கு முறைகளை நன்கு அறிந்து வாசிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். மேலும் இறைவார்த்தையை வாசித்து அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு புரிந்துகொள்ளவும் வேண்டும்.

திருவிவிலியத்தில் பொதிந்துள்ள இறைவார்த்தையின் மேன்மையினை நன்கு புரிந்து கொள்வோம்.

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்களையும் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம் அவையாவன :

1. ஐந்நூல்
2. வரலாற்று நூல்கள்
3. ஞான நூல்கள்
4. இறைவாக்கு நூல்கள்
5. வெளிப்பாட்டு இலக்கியம்

**பழைய ஏற்பாட்டிலுள்ள முதல் ஐந்து நூல்களும் ஐந்நூல் என அழைக்கப்படுகின்றது.**

**ஐந்நூல்**

1. தொடக்கநூல்
2. விடுதலைப் பயணம்
3. லேவியர்
4. எண்ணிக்கை
5. இணைச்சட்டம்

5

**இரண்டாவது தொகுதி** வரலாற்று **நூல்கள் என அழைக்கப்படுகின்றது. அவற்றுள் அடங்கும் நூல்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரலாற்று நூல்கள்

1. யோசுவா
2. நீதித் தலைவர்கள்
3. ரூத்து
4. 1 சாமுவேல்
5. 2 சாமுவேல்
6. 1 அரசர்
7. 2 அரசர்
8. 1 குறிப்பேடு
9. 2 குறிப்பேடு
10. எஸ்ரா
11. நெகேமியா
12. தோபித்து
13. யூதித்து
14. எஸ்தர்
15. 1 மக்கபேயர்
16. 2 மக்கபேயர்
17. மலாக்கி

16

**மூன்றாவது தொகுதி ஞானநூல்கள் என அழைக்கப்படுகின்றது. அவற்றுள் 7 நூல்கள் அடங்குகின்றன.**

### ஞானநூல்கள்

1. யோபு
2. திருப்பாடல்கள்
3. நீதிமொழிகள்
4. சபை உரையாளர்
5. இனிமைமிகு பாடல்
6. சாலமோனின் ஞானம்
7. சீராக்கின் ஞானம்

7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்காவது தொகுதி இறைவாக்கினர் நூல்கள் என அழைக்கப்படுகின்றது. இதில் 17 நூல்கள் அடங்குகின்றன.**

**இறைவாக்கினர் நூல்கள்** 17

1. எசாயா
2. எரேமியா
3. புலம்பல்
4. பாரூக்கு
5. எசேக்கியேல்
6. ஓசேயா
7. யோவேல்
8. ஆமோஸ்
9. ஒபதியா
10. யோனா
11. மீக்கா
12. நாகூம்
13. அபகூக்கு
14. செப்பனியா
15. ஆகாய்
16. செக்கரியா
17. மலாக்கி

**ஐந்தாவது தொகுதி வெளிப்பாட்டு இலக்கியம் என அழைக்கப்படுகின்றது.**

**வெளிப்பாட்டு இலக்கியம்** 1

தானியேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

**பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்ட புதிரைப் பூர்த்தி செய்யுங்கள். (பென்சிலைப் பயன்படுத்தவும்)**

### இடமிருந்து வலம்

1. இறைவாக்கினர் நாகூம் நூலை அடுத்து வரும் நூல்.
3. வரலாற்று நூல்களின் பிரதான நபர்.
7. வரலாற்று நூல்களில் இரு நூல்களுக்குரிய பொதுப் பெயர்.
9. முதலாவது நூல் தொகுதிக்குரிய சட்ட நூல்.
10. ஞானத்தைப் பற்றிக் கூறும் நூல்.
11. ஞான நூல்களின் பிரதான நூல்.
13. இறைவாக்கினர் யோனா நூலுக்குப் பின்வருவது.
14. ஆமோஸ் இறைவாக்கினர் நூலுக்கு அடுத்து வரும் நூல்.
16. வரலாற்று நூல்களுள் பெண்கள் தொடர்பான முக்கிய நூல்.
18. ஞான நூல்களின் இறுதி நூல்.
19. எண்ணிக்கை தொடர்பாகக் கூறப்படும் நூல்.
21. வரலாற்று நூல் தொகுதியில் இறுதி இரு நூல்கள் இப்பெயரால் அழைக்கப்படுகிறது.
22. இறைவாக்கினர் நூல் வரிசையில் 10வது நூல்.
23. அரசிகள் தொடர்பான வரலாற்று நூல்.
26. பெரிய இறைவாக்கினர்களில் ஒருவர்.
28. துன்பம் நிறை பாடல்கள் அடங்கியுள்ள நூல்.
30. இறைவாக்கினர் நூல்களில் இறுதி நூல்.
32. அபகூக்குக்கும் ஆகாய்க்கும் இடையே அமைந்துள்ள நூல்.
33. வரலாற்று நூல்களுள் அடங்கியுள்ள இரு நூல்கள்.
35. இறைவாக்கினர் ஓசேயாவுக்கு அடுத்து வரும் நூல்.
37. இறைவாக்கினர் நூல் வரிசையில் இறுதிக்கு முன் உள்ள நூல்.
39. அரசர் தொடர்பாகக் கூறப்படும் இரு நூல்களில் ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலிருந்து கீழ்

2. இறைவாக்கினர் நூல் வரிசையில் 4வது நூல்.

4. ஐந்நூல் தொகுதியின் மூன்றாவது நூல்.

5. ஐந்நூலின் முதலாவது நூல்.

6. திருவிவிலியத்தில் செபப்புத்தகம் என அறிமுகப்படுத்தப்படுவது.

8. வீரத் தலைவர்கள் பற்றிக் கூறப்படும் நூல்.

12. எஸ்ரா நூலுக்கு அடுத்து வருவது.

15. பெண்களைப் பற்றிக் குறிப்பிடப்படும் வரலாற்று நூல் ஒன்று.

17. யோவேல் இறைவாக்கு நூலுக்கு முன்னுள்ள நூல்.

19. இறைவாக்கினருள் முதன்மையான இறைவாக்கினர்.

20. இஸ்ரயேல் மக்களின் எகிப்திய அடிமைத்தனத்தோடு தொடர்புபட்ட நிகழ்வுகளை உள்ளடக்கியது.

22. மோசேக்குப் பின் இஸ்ரயேலை வழிநடத்திய தலைவர்.

23. பிரதான இறைவாக்கினரில் மூன்றாவது இறைவாக்கினர்.

24. ஒபதியா இறைவாக்கினர் நூலுக்கு முன்னுள்ள நூல்.

25. மறையைப் போதிப்பவரோடு தொடர்புடைய ஞான இலக்கிய நூல்.

27. மீக்கா இறைவாக்கு நூலுக்கு அடுத்து வருவது.

29. காதல் பற்றிய பாடல்கள் அடங்கியுள்ள நூல்.

31. வெளிப்பாட்டு இலக்கியத் தொகுதிக்குள் உள்ளடக்கப்படும் நூல்.

34. ஞான இலக்கிய நூலக இருப்பதோடு திருப்பாடலுக்கு அடுத்து வரும் நூல்.

36. நெகேமியா நூலுக்கு முன் உள்ள நூல்.

38. இறைவாக்கினர் செப்பனியா நூலுக்கு அடுத்து வரும் நூல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

வீட்டுக்கு ஒரு திருவிவிலியத்தை விலை கொடுத்து வாங்குவோம். அதில் அடங்கியுள்ள நூல்களை முறைப்படி கற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 புதிய ஏற்பாட்டு நூல்களை வகைப்படுத்தல்

புதிய ஏற்பாட்டில் 27 நூல்கள் அடங்கியுள்ளன. அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. நற்செய்தியும் திருத்தூதர் பணிகளும்
2. திருமுகங்கள்
3. திருவெளிப்பாட்டு இலக்கியம்

## நற்செய்தியும் திருத்தூதர் பணியும்

இதில் ஐந்து நூல்கள் அடங்கியுள்ளன.

1. தூய மத்தேயு நற்செய்தி
2. தூய மாற்கு நற்செய்தி
3. தூய லூக்கா நற்செய்தி
4. தூய யோவான் நற்செய்தி
5. திருத்தூதர் பணிகள்

நான்கு நற்செய்தி நூல்களிலும் இயேசுவின் போதனைகளும் பணிகளும் அடங்கியுள்ளன. நற்செய்தியில் அடங்கியுள்ள இயேசுவின் படிப்பினைகள் எமது அன்றாட வாழ்விற்கு முக்கியமானதாக இருப்பதால் நாம் தினமும் அவைகளை வாசித்து தியானிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படும் போது நற்செய்தி நூல்களை பயன்படுத்த இலகுவாக இருக்கும்.

திருத்தூதர் பணிகள் நூலில் இயேசுவின் விண்ணேற்புக்குப் பின் திருச் சபை ஆரம்பித்து வளர்ச்சியடைந்த விதம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்நூலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தூதர்களான பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

### திருமுகங்கள்

புதிய ஏற்பாட்டில் 21 திருமுகங்கள் உள்ளடங்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) உரோமர் | 8) 1 தெசலோனிக்கர் | 15) யாக்கோபு |
| 2) 1 கொரிந்தியர் | 9) 2 தெசலோனிக்கர் | 16) 1 பேதுரு |
| 3) 2 கொரிந்தியர் | 10) 1 திமொத்தேயு | 17) 2 பேதுரு |
| 4) கலாத்தியர் | 11) 2 திமொத்தேயு | 18) 1 யோவான் |
| 5) எபேசியர் | 12) தீத்து | 19) 2 யோவான் |
| 6) பிலிப்பியர் | 13) பிலமோன் | 20) 3 யோவான் |
| 7) கொலோசையர் | 14) எபிரேயர் | 21) யூதா |

தொடக்க திருச்சபையினருக்கு மட்டுமல்ல எக்காலத்திற்கும் பொருத்தமான முக்கியமான படிப்பினைகள் இத் திருமுகங்களில் அடங்கியுள்ளன. அவை எமது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவையாகும். குறிப்பாக ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்படும் திருமுகங்களுக்கு செவிமடுக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

### திருவெளிப்பாட்டு இலக்கியம்

புதிய ஏற்பாட்டில் இடம்பெறும் ஒரேயொரு வெளிப்பாட்டு இலக்கியம் திருவெளிப்பாட்டு நூல் ஆகும். அன்று கிறிஸ்தவர்கள் முகங்கொடுத்த துன்பங்களின் போது அவர்களைத் திடப்படுத்த இந்நூல் எழுதப்பட்டது. எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள குறியீட்டு அடையாளங்களைப் பயன்படுத்தி இந்நூல் எழுதப்பட்டது.

இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் தமது நம்பிக்கையின் நிமித்தம் துன்பப்படுகின்றார்கள். அவர்களுடைய நம்பிக்கையைப் பாதுகாத்துக்கொள்ள அவர்களுக்காகச் செபிப்போம். இவ்வாறு அவர்களுக்கு துணை புரிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எமது கிறிஸ்தவ நம்பிக்கையைப் பாது காத்துக்கொள்ள உறுதியான தீர்மானம் எடுப்போம்.

**செயற்பாடு**

**பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி கீழே தரப்பட்ட புதிரைப் பூர்த்தி செய்யவும்.**

**மேலிருந்து கீழ்**

2. புதிய ஏற்பாட்டில் முதலாவது திருமடல்.
3. தூய பவுல் தனிப்பட்ட முறையில் இரு திருமுகங்களை இவருக்கு எழுதினார்.
4. தூய பவுல் திருச்சபைக்கு இரு திருமுகங்களை எழுதியுள்ளார்.
6. திருமுகங்களில் நான்காவது.
8. இரண்டாவது நற்செய்தி நூல்.
9. திருத்தூதர் ஒருவரின் பெயரால் எழுதப்பட்ட மூன்று திருமுகங்கள்.
10. புதிய ஏற்பாட்டின் இறுதி நூல்.
13. தூய பவுலால் ஒரு நபருக்கு எழுதப்பட்ட திருமுகம்.
15. திருத்தூதர்களின் பெயரால் எழுதப்பட்டவை.

**இடமிருந்து வலம்**

1. எபேசியருக்கு அடுத்து வரும் திருமுகம்.
3. திருத்தூதர்களின் செயற்பாடுகள் அடங்கியநூல்.
4. திருமுகங்களில் ஏழாவது இடத்தில் இருப்பது.
5. மூன்றாவது நற்செய்தி நூல்.
7. தூய பவுல் தனிநபர் ஒருவருக்கு தன் கைப்பட எழுதிய நூல்.
9. நான்காவது நற்செய்தியின் ஆசிரியர்.
10. தூய பவுலின் திருமடலில் ஐந்தாவது திருமுகம்.
12. திருத்தூதர்களில் முதன்மையானவரின் பெயரில் இரு திருமுகங்கள் உள்ளன.
14. திருமுகங்களில் 14வது திருமுகம்.
16. தூய பவுலினால் எழுதப்பட்ட இரண்டு திருமுகங்கள் இப் பெயரில் உள்ளன.
17. 15வது திருமுகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாழ்க்கைக்கு

புதிய ஏற்பாட்டின் படிப்பினைகள் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்க்கைக்கு மிக முக்கியமானதாகும். எனவே தினமும் இறைவார்த்தையை வாசித்து தியானிக்கப் பழகிக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 திருப்பாடல்

இப் பாடலைத் தியானித்துப் பாடுவோம். இது திருப்பாடல் 121ஐ தழுவி எழுதப்பட்டது.

**மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன்!**
**எனக்கு எங்கிருந்து உதவி வரும்.**

**விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய**
**ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்.**

**அவர் உம் கால் இடறாதபடி பார்த்துக் கொள்வார்**
**உம்மைக் காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார்.**

**இதோ! இஸ்ரயேலைக் காக்கின்றவர்**
**கண்ணயர்வதுமில்லை உறங்குவதும் இல்லை**

**ஆண்டவரே உம்மைக் காக்கின்றார்**
**அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்**
**அவரே உமக்கு நிழல் ஆவார்!**

**பகலில் கதிரவன் உம்மைத் தாக்காது**
**இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது**

**ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார்**
**அவர் உம் உயிரைக் காத்திடுவார்**

**நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும் இப்போதும் எப்போதும்**
**ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார்.**

'திருப்பாடல்கள்' என்னும் இந்நூல் விவிலியப் பக்திப் பாடல்கள், இறை மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். இதில் 150 திருப்பாடல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் அடங்கியுள்ள எல்லாப் பாடல்களும் இசைக்கருவிகளைப் பயன்படுத்தி தாளத்துடன் பாடப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடல்கள் இறைவனின் நன்மைத்தனத்தினால் மக்கள் தாம் பெற்ற நன்மைகளுக்காக இறைவனைப் புகழ்ந்து மகிழ்ச்சியால் நிறைந்து பாடப்பட்டவையாகும். எனினும் துன்ப வேளையிலும் புலம்பலின் போதும் மன்னிப்பு வேண்டலின் போதும் பாடப்பட்ட பாடல்களும் இதில் அடங்கியுள்ளன. மேலும் வேறு சில பாடல்கள் நோய்நொடிகள், வாழ்வின் கசப்பான அனுபவங்கள் இடம்பெற்ற வேளைகளில் பாடப்பட்டவையாகும்.

யாவே இறைவன் மட்டில் இஸ்ரயேல் மக்கள் கொண்டிருந்த உறவு, வாழ்வு அவரோடு கொண்டிருந்த அனுபவங்களின் பின்னணியில் 'திருப்பாடல்கள்' நூல் எழுதப்பட்டது. இது இஸ்ரயேல் மக்களின் செபப் புத்தகமாகவும் பாமாலையாகவும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனால் 'திருப்பாடல்' திருவிவிலியத்தின் 'செபப்புத்தகமாக' குறிப்பிடப்படுகின்றது.

தாவீது அரசர் திருப்பாடல்கள் நூலின் ஆசிரியராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றார். ஆயினும் இப்பாடல்களில் காணப்படும் மொழிநடையின் தன்மைகள் மற்றும் காலம் உள்ளடக்கம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது ஆசிரியத்துவம் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

திருப்பாடல்களின் பின்னணியாக அமைந்திருப்பது இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டுமுறை. திருப்பாடல்கள் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (திருவிவிலியத்தின் ஐந்நூலின் வகைப்படுத்தலை ஒத்ததாக இது காணப்படுகின்றது)

| | |
|---|---|
| முதலாவது பகுதி | 1 - 41 |
| இரண்டாவது பகுதி | 42 - 72 |
| மூன்றாவது பகுதி | 73 - 89 |
| நான்காவது பகுதி | 90 - 106 |
| ஐந்தாவது பகுதி | 107 - 150 |

எல்லாப் பாடல்களிலும் இறுதியாக உள்ள வரிகள் செப வடிவத்தைக் கொண்டுள்ளது. எல்லாப் பாடல்களும் இறைபுகழ்ச்சியோடு நிறைவு பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் திருப்பாடல் 41: 13

திருப்பாடல் 72: 19

திருப்பாடல் 89: 52

திருப்பாடல் 106: 48

திருப்பாடல் 150

## பாடலின் வகைகள்

### 1. இறைபுகழ்ச்சி

இறைவனுடைய படைப்பும் மீட்பின் செயற்பாடுகளும் அவருடைய குண இயல்புகளான நன்மைத்தனம், இரக்கம், பரிவு, மேன்மை ஆகியன பற்றி வர்ணித்து நன்றி செலுத்த எழுதப்பட்டுள்ளமையை இப்பாடல்களில் காணலாம்.

*(திருப்பாடல் 8, 112, 145 - 150)*

*ஆண்டவரே! எங்கள் தலைவரே! உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! உமது மாட்சி வானங்களுக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது.*

(திருப்பாடல் 8:1)

### 2. புலம்பல்

பிரச்சினைகள், துன்பங்கள் மற்றும் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது ஆறுதல் உதவி, பாதுகாப்பு, மீட்பு வேண்டி இறைவனிடம் மன்றாடுகின்ற பாடல்களாக இவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தனிநபர் புலம்பல் பாடல்கள் *(திபா. 3, 5, 6, 7, 13, 14, 51)*

2. நாட்டு மக்களின் வேண்டுதல்கள் *(திபா. 44, 74, 49, 80, 83)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ ஆண்டவரை நோக்கி இவ்வாறு வேண்டினேன்; நீரே என் இறைவன்! ஆண்டவரே! உம் இரக்கத்திற்காக நான் எழுப்பும் குரலுக்குச் செவிசாயும்.

என் தலைவராகிய ஆண்டவரே! எனக்கு விடுதலை வழங்கும் வல்லவரே! போர் நடந்த நாளில் என் தலையை மறைத்துக் காத்தீர்!

(திபா.140:6 - 7)

### 3. நன்றிப்பாடல்கள்

கடவுள் வழங்கிய ஆசிகளுக்கு நன்றி செலுத்தி பாடப்பட்டவைகளாகும்.

*(திபா.* 18, 105 - 116)

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர், என்றும் உள்ளது அவரது பேரன்பு.

(திபா. 136:1)

### 4. ஞானப்பாடல்கள்

நீதிமான்களாக வாழ மக்களை நல்வழிப்படுத்தும் பாடல்களாக இவை காணப்படுகின்றன.

உ-ம் திபா. 1, 73, 133

நற்பேறு பெற்றவர் யார்? - அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர்; பாவிகளின் தீயவழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவினில் அமராதவர்;

ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்;

(திபா. 1:1 - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அரசர் பற்றிய பாடல்கள்**

அரச திருப்பொழிவு, அரச திருமணங்களின் போது பயன்படுத்தப்படும் பாடல்களாக இவை காணப்படுகின்றன.

(2, 45, 72)

கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும்; அரச மைந்தரிடம் உமது நீதி விளங்கச் செய்யும்.

(திபா. 72:1)

**6. சீயோன் அல்லது வழிபாட்டுப் பாடல்கள்**

சீயோனின் பாடல்கள் எனப்படும் வழிபாட்டுப் பாடல்கள் இதில் காணப்படுகின்றன. சீயோன் என அழைக்கப்படுவது எருசலேம் ஆகும். இப்பாடல்களினூடாக எருசலேமின் மகத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. எருசலேமை நோக்கிய திருயாத்திரைகளின் போது இவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

(திபா. 46, 48, 122, 125)

கடவுள் மீது நம்பிக்கை கொள்வோர் சீயோன் மலைபோல் நிலைத்திருப்பர்

**7. நம்பிக்கையின் பாடல்கள்**

இறைவன் மீது வைத்திருக்கும் நிலையான நம்பிக்கையை வெளிப்படுத்துவதோடு இறைவனைச் சார்ந்து இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

(திபா. 23, 62)

மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.

(திபா. 23 : 4)

திருப்பாடல் செபத்தைப் பற்றிய ஒரு புதையலாகும். இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்க்கையில் இறைவனை அனுபவித்தமைக்கு இந்நூல் ஒரு சிறந்த சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வாழ்வில் இடம்பெற்ற எல்லா நிகழ்வுகளும் இறை அனுபவத்துடன் பின்னிப்பிணைந்துள்ளதை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

திருப்பாடலின் பாடல்கள் இயேசுவின் போதனைகளின் போது பயன்படுத்தப்பட்டுள்ளன. மலைப்பொழிவின் போதனைகளின் போது இப்பாடல்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
உ-ம்: 6:9, 24:3 - 4, 37:11, 48:2. மேலும் இயேசு சிலுவை மரத்தில் திருப்பாடல் 22:1ஐப் பயன்படுத்தியுள்ளார்.

மகிழ்ச்சியில், வெற்றியில், இறைவனை மகிமைப்படுத்தும் நாம் வேதனையில், கவலையில் இறைவனிடம் மன்றாடுகின்றோம். அவரின் உதவியை நாடுகின்றோம். பாவத்தில் வீழ்ந்தபோது மனம் வருந்துகின்றோம். இறைவனைத் தேடி மீண்டும் செல்கின்றோம். இத்தகைய அனுபவங்கள் திருப்பாடலினூடாக எம்மை செபத்தில் நிலைத்திருக்கச் செய்கின்றன.

திருவழிபாட்டில் உன்னதமான பகுதியாகிய இறைவார்த்தைக்குப் பதிலுரைப் பாடல்களாக இப்பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் திருப்புகழ்மாலையிலும், மாலை ஆராதனையிலும் திருப்பாடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

எனவே திருப்பாடல்கள் அன்றுபோல் இன்றும் திருவழிபாட்டில் பயன்படுத் தப்படுகின்றன. அது இறை மக்களின் உள்ளத்தை இறைவன்பால் இட்டுச்செல்ல உதவிடும் செபப்புத்தகமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. திருப்பாடல்களில் நீர் விரும்பிய பாடல் ஒன்றை எழுதுக.

2. நீர் தெரிவுசெய்த பாடலை சுவர்ப்பத்திரிகையில் காட்சிப்படுத்துக.

3. 'திருப்பாடல் திருவிவிலியத்தின் செபப் புத்தகமாகும்' என்னும் தலைப்பில் 100 சொற்களளவில் கட்டுரை ஒன்று வரைக.

4. இறைவனைப் புகழ்ந்து பாடக்கூடிய பாடல் ஒன்று தயாரியுங்கள்.

## வாழ்க்கைக்கு

செபவழிபாட்டின் போது திருப்பாடலைப் பயன்படுத்தப் பழகிக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஒத்தமை நற்செய்தி

**கொறற்றி** : அம்மா! எனது வகுப்பில் ரெபேக்கா என்ற எனது நண்பி இயேசுவைப் பற்றி அழகான கவிதை ஒன்று எழுதியிருக்கிறா. அது சிறுவர் பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது.

**அம்மா** : எவ்வளவு நல்ல விடயம் மகள்.

**கொறற்றி** : அம்மா நானும் இயேசுவைப் பற்றி அறிய ஆவலாக உள்ளேன். அவர் கற்பித்தவற்றையும், கதைத்தவற்றையும், நோயாளிகளைக் குணப்படுத்திய விதத்தைப் பற்றியும் நன்றாக அறிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறேன்.

**அம்மா** : மகளே! அப்படியென்றால் நற்செய்தி நூலை நன்கு வாசி, அதுவே இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ளும் சரியான வழி.

**கொறற்றி** : என்னால் அதை முழுமையாக வாசித்து முடிக்க இயலுமா?

**அம்மா** : ஆம் மகளே, முதலில் ஒத்தமை நற்செய்தி நூல்களை வாசிக்கத் தொடங்கு.

**கொறற்றி** : ஒத்தமை நற்செய்தியா? அது என்ன அம்மா? நான் கேள்விப்பட்டதே இல்லை.

**அம்மா** : நல்லது மகளே நான் உனக்கு ஒத்தமை நற்செய்தி என்னவென்று சொல்லித் தருகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தமை நற்செய்தி நூல்கள் 3 உள்ளன. அவையாவன

1. தூய மத்தேயு நற்செய்தி
2. தூய மாற்கு நற்செய்தி
3. தூய லூக்கா நற்செய்தி

இந்த நற்செய்தி நூல்களுக்கிடையே அநேகமான ஒத்த தன்மைகள் காணப்படுவதால் இவை ஒத்தமை நற்செய்தி நூல்கள் என அழைக்கப்படுகின்றன. இம் மூன்று நற்செய்தியாளர்களும் பெரும்பாலும் இயேசுவைப் பற்றிய செய்திகளை ஒரே மாதிரியாகவே எடுத்துக் காட்டியுள்ளனர்.




இயேசுவின் திருமுழுக்கை ஒத்தமை நற்செய்தியாளர்கள் மூவரும் ஒரே விதத்திலேயே காண்கின்றனரா? இதற்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அப்பொழுது, ''என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

(மத். 3:17)

அப்பொழுது, ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

(மாற்.1:11)

அப்பொழுது, ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

(லூக்.3:22)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய லூக்கா நற்செய்தி பற்றி தரம் 8 இல் கற்றோம். தூய மத்தேயு, தூய மாற்கு நற்செய்தியாளர்கள் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொள்வோம்.

## தூய மத்தேயு நற்செய்தி

**ஆசிரியர்** : திருத்தூதரான தூய மத்தேயு

**காலம்** : கி.பி 80 - 90

**நோக்கம்** : யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா இயேசு தான் என்பதை எடுத்துக் காட்டல்.
இயேசு புதிய மோசே என்பதையும், மெசியாவாகியஆசிரியர் என்பதையும் எடுத்துக்காட்டல்.

**வேறு பெயர்** : தூய திருச்சபையின் நற்செய்தி
இறையாட்சி நற்செய்தி

மனிதன்.




4.1 தூய மத்தேயு

## தூய மாற்கு நற்செய்தி

**ஆசிரியர்** : தூய மாற்கு

**காலம்** : கி.பி 64 - 66

**நோக்கம்** : உரோமையில் நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களைத் திடப்படுத்துதல்.
வெற்றி பெறுவதற்கு ஒரே வழி சிலுவையே என்பதை எடுத்துக்காட்டல்.

**வேறு பெயர்** : பாடுகளின் நற்செய்தி




4.2 தூய மாற்கு

நாமும் எமது வாழ்வில் எதிர்கொள்ளுகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்து கிறிஸ்துவுக்கு சான்று பகர முற்படுவோம். உரோமை மன்னனின் துன்புறுத்தல்களுக்கு மத்தியில் தூய மாற்குவின் கிறிஸ்தவ குழுமங்கள் நம்பிக்கையோடு செயலாற்றியதை நாமும் முன்மாதிரியாகக் கொள்வோம். எமது வாழ்வில் அன்றாடம் முகங்கொடுக்கும் சவால்களுக்கு நம்பிக்கையோடு பதிலளிப்போம்.



இலவசப் பாடநூல்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எமக்குக் கொடுத்திருக்கும் ஆற்றல்கள் திறமைகளுக்காக அவருக்கு நன்றி கூறுவோம். சிறப்பாக நற்செய்தி ஆசிரியர்களைப் போன்று எமது எழுத்தாற்றலைப் பயன்படுத்தி நற்செய்தியைப் பரப்புவோம்.

## செயற்பாடு

1. ஒத்தமை நற்செய்தி நூல்களின் பெயர்களைத் தருக.
2. தூய மத்தேயு நற்செய்தியின் வேறு பெயர்களைத் தருக.
3. தூய மாற்கு நற்செய்தியின் நோக்கத்தை எழுதுக.

## வாழ்க்கைக்கு

சவால்களுக்கு மத்தியில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோவான் நற்செய்தி

**ஆசிரியர்** : திருத்தூதரான தூய யோவான்

**காலம்** : கி. பி 90 - 100

**நோக்கம்** : இயேசுவே இறைமகன் என்றும் அவரை நம்புவோர் நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்வர் என கற்பித்தல். இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தல்.

**வேறுபெயர்** : ஆன்மீக நற்செய்தி




5.1 தூய யோவான்

**''நானே'' என்ற சொற்பதம்**

இயேசு கிறிஸ்து தமது இறைத் தன்மையை வெளிப்படுத்தும் ''நானே'' என்ற சொற்பதம் இந் நற்செய்தியில் 7 இடங்களில் காணப்படுகிறது.

**1. ''நானே வாழ்வு தரும் உணவு'' (யோவா. 6:35)**

நிலைவாழ்வைப் பெற்றுத்தரும் உண்மையான உணவு இயேசுகிறிஸ்துவே. அவர் நற்கருணையில் உயிருடலாக வீற்றிருக்கிறார். நாமும் நற்கருணையை மிகுந்த பக்தி மரியாதையோடும் அன்போடும் பெற்றுக்கொள்ள வேண்டும். அடிக்கடி நற்கருணையைப் பெற்றுக்கொள்வதனால் எமது ஆன்மீக வாழ்வு ஊட்டம் பெறுகிறது.

**2. ''நானே உலகின் ஒளி'' (யோவா. 8:12)**

இயேசுகிறிஸ்து அனைவருக்கும் ஒளியாக இருப்பதை இந் நற்செய்தி விளக்குகின்றது. இயேசு வார்த்தையில் மட்டுமன்றி செயலிலும் உலகிற்கு ஒளியாக இருக்கின்றார். ஒளி இருக்கும் இடத்தில் இருளுக்கு இடமில்லை. ஒளியில் வாழ்வோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவச் செயல்களிலிருந்து விலகி இருப்பர். நாமும் ஒளியின் பிள்ளைகளாக வாழ முயற்சிப்போம்.

**3. ''ஆடுகளுக்கு வாயில் நானே'' (யோவா. 10:7)**

இயேசுகிறிஸ்து என்னும் ஆயனின் ஆடுகளாகிய நாம் அவர் வழியாக நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**4. ''நானே நல்ல ஆயன்'' (யோவா. 10:11)**

ஒரு ஆயன் தன் மந்தையை வழிநடத்தும் போது மந்தைக்கு முன்பாக பயணிப்பார். ஆடுகளுக்குத் தேவையான பாதுகாப்பையும் வழிகாட்டுதலையும் உறுதி செய்வதற்காகவே ஆயன் அவ்வாறு பயணிப்பார். இயேசுகிறிஸ்து நல்ல ஆயனாக எமக்கு வழிகாட்டுகின்றார். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்த நல்ல ஆடுகளாக இருப்போம்.



*5.2 நல்லாயன்*

**5. ''உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே'' (யோவா. 11:25)**

இயேசு எமக்கு வாழ்வு கொடுப்பது மட்டுமல்ல, மரணத்தை வெற்றி கொள்ளும் நிலைவாழ்வில் எம்மைப் பங்காளிகளாக்குகின்றார். அவர் மரணத்தை வெற்றிகொண்டு உயிர்த்தெழுந்தது போலவே எம்மையும் உயிர்த்தெழச் செய்வார். மரணத்தின் பின் எமக்குக் கிடைக்கும் வாழ்வில் நம்பிக்கை கொண்டு அந்த முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்ள நல்வாழ்வு வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. ''வழியும் உண்மையும் வாழ்வும் நானே'' (யோவா. 14:6)

வழிகாட்டுவதற்கும், உண்மையை வெளிப்படுத்துவதற்கும் அவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளவரால் மட்டுமே முடியும். இறைவனிடம் செல்லும் வழியை இயேசு கிறிஸ்துவே அறிவார். அவர் உண்மையானவராக இருக்கின்றார். அவர்மீது நம்பிக்கை கொள்வதன் வழியாக எம்மால் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் அவர் காட்டிய பாதையில் பயணித்து உண்மைக்கு சான்று பகர்ந்து வாழ வேண்டும்.

### 7. ''நானே திராட்சைச் செடி'' (யோவா. 15:1)

திராட்சைச் செடியின் கிளைகள் பலன்தர அதற்குத் தேவையான தண்ணீர், ஊட்டச்சத்து ஆகியவற்றை அவை செடியிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து மெய்யான திராட்சைச் செடியாவார். எமது வாழ்வு வெற்றிபெற, மிகுந்த பலன்தர இயேசுகிறிஸ்து என்னும் திராட்சைச் செடியோடு நாம் இணைந்திருத்தல் வேண்டும். இயேசுகிறிஸ்து என்னும் திராட்சைச் செடியில் கனி கொடுக்கும் கிளைகளாவோம்.

**செயற்பாடு**

1. யோவான் நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கங்கள் இரண்டு தருக.
2. நான்காம் நற்செய்தியில் குறிப்பிடப்பட்ட 'நானே' என்ற சொற்பதங்கள் தொடர்பான மூன்று விடயங்கள் தருக.
3. ''நல்ல ஆயன் நானே'' என்ற இயேசுவின் கூற்றை உமது அனுபவத்தோடு இணைத்து 10 வசனங்கள் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

நல்ல ஆயனின் மந்தைகளாக வாழ முற்படுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மனிதன் பாவத்தில் விழுதல்

ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த கிறிஸ்ரி என்னும் மாணவன் மிகவும் திறமைசாலியாகவும் இறைவனை அன்பு செய்பவனாகவும் இருந்தான். அவனிடம் காணப்பட்ட சிறந்த நற்குணங்களால் அவன் எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருந்தான்.

''அன்பான பிள்ளைகளே! கிறிஸ்ரியைப் போல நல்லவர்களாக ஏன் நீங்களும் வாழ முடியாது? உங்களது நடத்தைகள் மிகவும் இழிவானதாகக் காணப்படுகிறது அல்லவா? நீங்கள் எந்தச் செயலையும் சரியாகச் செய்வதில்லை'' என்று ஆசிரியர் ஏனைய மாணவர்களைப் பார்த்துக் கூறி கடிந்து கொண்டார். இவ்வாறு அதிபராலும் எல்லா ஆசிரியர்களாலும் அவமதிப்புக்குள்ளான மாணவர்கள் கிறிஸ்ரியையும் எப்படியாவது தம்பக்கமாக ஈர்த்துக்கொள்ள தீர்மானித்தார்கள்.

அன்று பாடசாலை முடிந்ததும் வீட்டுக்குச் செல்லும் சக மாணவர்கள் கிறிஸ்ரியோடு மிகவும் அன்பாகப் பேசி கையடக்கத் தொலைபேசி ஒன்றைக் காட்டி அதிலுள்ள படங்களையும் மெது மெதுவாகக் காட்டினார்கள். எப்படியாவது கிறிஸ்ரியை தம்வசப்படுத்த வேண்டுமென எண்ணிய மாணவர்கள்; நல்ல படங்களைக் காட்டிய பின்னர் அதிலுள்ள தீய படங்களையும் காண்பித்து தம் பக்கமாக ஈர்த்துக் கொண்டார்கள்.

இறுதியில் கையடக்கத் தொலைபேசிக்கே அடிமையாகிய கிறிஸ்ரி அதிலே தனது நேரம் முழுவதையும் செலவிட்டதால் இறைவனின் அருளையும் மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மதிப்பையும் இழந்தான். அத்துடன் அவன் பரீட்சையிலும் சித்தியடையாமல் எல்லோருடைய அவமதிப்புக்கும் ஆளாக நேரிட்டது. நண்பர்களும் சக மாணவர்களும் அவனை விட்டு விலகினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில்தான் இறை தந்தையைப் பற்றிய ஞாபகம் அவன் உள்ளத்தில் எழுந்தது. உடனே அவன் தமது பங்குத் தந்தையிடம் சென்று தனக்கு நிகழ்ந்தவற்றை எல்லாம் எடுத்துக்கூறி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டான். பங்குத் தந்தையின் அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு இழந்து போன வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப விரும்பினான். இனிமேல் தவறான வழியில் ஒருபோதும் நடக்கமாட்டேன் என்று உறுதியான தீர்மானம் எடுத்தான்.

ஆண்டவராகிய கடவுள் ஏதேன் தோட்டத்தை உருவாக்கி ஆதாமையும் ஏவாளையும் அத்தோட்டத்தைப் பாதுகாத்து விருத்தி செய்வதற்காக அங்கு குடியமர்த்தினார். அங்கே இறைவன் அவர்களுக்கு கீழ் வரும் கட்டளையை கொடுத்தார்.

''நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தில் இருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து உண்ணும் நாளில் சாகவே சாவாய்''

(தொநூ 2.17)

மேலே குறிப்பிட்டிருக்கும் திருவிவிலியப் பகுதியில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினையாதெனில், இறைவன், அன்பான தந்தையைப் போல், நாம் சரியான பாதையில் செல்ல எமக்கு அறிவுரை வழங்குகிறார் என்பதாகும். விசேட விதமாக மனச்சாட்சியின் ஊடாக இறைவன் எங்களோடு பேசுகிறார். எனவே நாம் எப்பொழுதும் இறைவனுடைய குரலுக்கு செவிமடுக்க வேண்டும்.



6.1 ஆதாமும் ஏவாளும் சோதனையில் விழுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் வாழ்ந்தார்கள். அவர்களுக்குத் தேவையான அளவு உணவு அங்கே இருந்தது. இறைவன் அவர்களோடு நண்பனைப் போல நெருங்கிப் பழகியதால் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

இறைதந்தை படைத்த காட்டு விலங்குகளில் எல்லாம், பாம்பானது மிகவும் சூழ்ச்சி மிக்கதாக இருந்தது. பாம்பு பெண்ணை சோதனைக்கு உட்படுத்தியது. அது பெண்ணை நோக்கி 'ஏதேன் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக் கூடாது என்று இறைவன் சொன்னது உண்மையா?' எனக் கேட்டது.

பெண் பாம்பிடம் 'தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக் கூடாது, அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள்.' என்று கடவுள் சொன்னார். பாம்பு பெண்ணிடம் 'நீங்கள் சாகவே மாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்' என்று கூறியது.

பாம்பின் தந்திரமான பேச்சை நம்பிய அப்பெண் அந்த மரத்தின் கனி சுவையானதாகவும், கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதை தன்னுடன் இருந்த தனது கணவனுக்கும் கொடுத்த போது அவனும் உண்டான்.

மேலேயுள்ள கதையில் ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்த விதம் காட்டப்படுகின்றது. நாமும் எப்போதும் இறைதந்தையின் அருகில் (பிரசன்னத்தில்) இருக்காவிட்டால் சாத்தான் ஆதிப்பெற்றோரை ஏமாற்றியது போல் எம்மையும் நிச்சயமாக சோதனைக்கு உட்படுத்துவான். விசேட விதமாக பாவச் சோதனை ஏற்படும் நேரங்களில் மனச்சாட்சிக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். பாவச்சோதனைகளில் விழாமல் அதில் வெற்றி பெறவேண்டும். சோதனைகளை வென்ற இயேசுவை நாங்கள் பின்பற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாம்பு**

1. பாம்பு சபிக்கப்படுதல்; அது வாழ் நாள் முழுவதும் ஊர்ந்து புழுதியை தின்பது.

**ஏவாள்**

1. மகப்பேற்றின் வேதனையை மிகுதி யாக்குதல்.
2. வேதனையோடு குழந்தைகளைப் பெறுவது.
3. கணவனை நீ அன்பு செய்வாய் அவன் உன்னை ஆளுகை செய்வான்.

பாவத்தின் விளைவு
(தொடக்க நூல்
3 : 14 - 19)

**ஆதாம்**

1. நிலம் சபிக்கப்படுதல்.
2. வாழ்நாள் எல்லாம் வருந்தி அதன் பயனை உண்ணுதல்.
3. முட்செடியையும், முட்புதரையும் நிலம் முளைப்பித்தல்.
4. வயல் வெளிப் பயிர்களை உண்ணுதல்.
5. மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உணவை உண்ணுதல்.

இறைவன் ஆதிப்பெற்றோரை வெறுப்புடன் அல்ல மாறாக, அன்பினாலேயே தண்டித்தார். நாமும் தவறு செய்கின்ற நேரத்தில் எம் பெற்றோர் அன்பினாலேயே எம்மைக் கண்டிக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கீழ்ப்படிவின்றி இருந்த ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரக்கம் காட்டி மீட்பின் நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தார். பாவத்தில் விழுந்த மனிதன் மேல் அளவில்லா அன்பு கூர்ந்து அவனைப் பாவத்திலிருந்து விடுவிப்பதற்கு மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார். அந்த வாக்குறுதி தொநூ 3 : 15ல் தரப்பட்டுள்ளது.

"உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்."

(தொநூ 3:15)

இந்த வாக்குறுதியின்படி பெண் என இங்கு கருதப்படுவது மனிதனின் சந்ததியாகும். பாம்பு என்பது சாத்தானாகும். சாத்தானுக்கும் மனிதனுக்குமிடையில் நித்தியத்திற்கும் போராட்டம் இருக்குமென்பது இங்கு கூறப்பட்டுள்ளது.

"அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்" என்ற வசனத்தில் அவள் வித்து என்று குறிப்பிடப்படுவது மீட்பாராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். கீழ்ப்படியாத மனிதனை மிகவும் அன்பு செய்த இறைவன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவனை விடுவிப்பதற்காக மீட்பர் ஒருவரை அனுப்புவதாகக் கொடுத்த வாக்குறுதி அதில் அடங்கியுள்ளது.

ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்களை அணியச் செய்தார்.

(தொநூ 3.2)

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைகளைக் கொடுத்ததன் மூலம் இறைவனுடைய கருணையும், அன்பும், பராமரிப்பும் காட்டப்படுகிறது.

மனிதனுடைய பலவீனத்திலே இறைவன் தமது இரக்கத்தைக் காண்பிக்கிறார். ஆகவே நாமும் மற்றவர்களுக்கு இரக்கத்தைக் காண்பிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. இறைகுரலுக்கு செவிமடுக்காது பிழையான வழியில் செல்லும் பாடசாலை நண்பனுக்கு / நண்பிக்கு நீர் கொடுக்கும் அறிவுரைகள் மூன்று தருக.

2. உமக்கு ஏற்படும் சோதனைகளின் போது அவற்றை வெற்றிகொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எழுதுக.

3. தொடக்கநூல் *3:15* எழுதி அதன்மூலம் நீர் பெறும் செய்தியை விளக்குக.

4. இறைவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரக்கம் காண்பித்தது போல் நீர் மற்றவர்ளுடன் இறை இரக்கத்தை பகிர்ந்து கொள்ளும் முறைகள் மூன்று தருக.

## வாழ்க்கைக்கு

- ✞ எப்பொழுதும் இறைகுரலுக்குச் செவிசாய்ப்போம்.
- ✞ சோதனையில் வெற்றி பெறுவோம்.
- ✞ இறை இரக்கத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 காயினும் ஆபேலும்



7.1 காயின் ஆபேல் காணிக்கை செலுத்தும் சந்தர்ப்பம்

ஆதாம் ஏவாளுக்கு காயின், ஆபேல் என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். ஆபேல் ஆடு மேய்பவன் ஆவான். காயின் நிலத்தைப் பண்படுத்துபவன் ஆவான். சில நாள்கள் சென்றன. காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்கு காணிக்கை கொண்டு வந்தான். ஆபேலும் தனது மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளை கொண்டு வந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் நோக்கினார். ஆனால் காயினையும் அவன் காணிக்கையையும் அவர் கனிவுடன் கண் நோக்கவில்லை. ஆதலால் காயின் கடுஞ் சினமுற்றான். ஆகவே ஆண்டவர் காயினுக்கு அறிவுரை கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் காயினிடம், "நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால்; பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும் நீ அதை அடக்கி ஆள வேண்டும்" என்றார்.

(தொநூ 4.6-7)

தன் சகோதரன் ஆபேலின் மேல் இறைவன் அன்பாய் இருக்கிறார் என்று அறிந்த காயின் எரிச்சல் மிகுந்து கோபத்தோடு வாழ்ந்து வந்தான். காயின் தீமையினால் ஆட்கொள்ளப்பட்டு வழிதவறிச் செல்வதை அறிந்த இறைவன் தீமையான எண்ணங்களை அகற்றி நல்லவனாக மாறும்படி புத்திமதி கூறினார். அவன் நன்மை செய்ய முயற்சி எடுத்தால் இறையுதவி அவனுக்கு கிடைக்கும் என்று வாக்கு கொடுத்தார்.

நாங்கள் தவறு செய்யும் போது இறைவன் எமக்கு சமயத்தலைவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் மூலம் அறிவுரை வழங்குகிறார். எங்களுக்கு சரியான வழியைக் காண்பிக்கும் அவர்களுக்கு நாங்கள் செவிமடுக்க வேண்டும்



7.2 காயீன் ஆபேலைக் கொலை செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயின் தன் சகோதரன் ஆபேலிடம் "நாம் வயல்வெளிக்குப் போவோம்" என்றான். அவர்கள் வெளியிலிருந்த பொழுது, காயின் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றான்.

(தொநூ 4.8)

காயின் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொன்றதன் மூலம் மனிதன் சகோதர அன்பிற்கு விரோதமாக செயற்பட்ட விதமும், எரிச்சல் பொறாமை மிகுதியால் காயின் சகோதர அன்பிற்கு மாறாகச் சென்று தன் சகோதரனைக் கொன்ற விதமும் வெளிக்காட் டப்படுகின்றது. இறைவனுடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களோடு சகோதர அன்போடு வாழவேண்டும். அவர்கள் மேல் எரிச்சல், பொறாமை கொள்ளக் கூடாது. அவர்களின் முன்னேற்றத்தில் நிறைவு கண்டு அவர்களது வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும்.

இறைவனுடைய அறிவுரையை புறக்கணித்து தவறு செய்த காயினிடத்தில் இறைவன் பல கேள்விகளை கேட்டார். "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" காயின் - எனக்குத் தெரியாது நான் என்ன சகோதரனுக்கு காவலாளியோ?"
இறைவன் - "நீ என்ன செய்து விட்டாய் உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்ன நோக்கி கதறிக் கொண்டிருக்கிறது"

பாவத்தில் விழுந்த காயினுக்கு இறைவன் கொடுத்த தண்டனையும் அதன் விளைவும்

1. நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.
2. நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது உனக்கு பலன் தராது.
3. பூமியிலிருந்து துரத்தப்பட்டிருக்கின்றாய்.
4. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்.

ஆண்டவர் காயினிடம் ஆபேலைப் பற்றி கேட்டபோது 'எனக்குத் தெரியாது' என்று அவன் பொய் பேசுகிறான். இதன் மூலம் பாவத்தின் வளர்ச்சியும் அதனால் மனிதனில் ஏற்பட்ட வைராக்கியமும் வெளிப்படுகின்றது. மறைமுகமாக பாவம் செய்தாலும் இறைவன் அனைத்தையும் அறிவார். காயினை இறைவன் தண்டித்தாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு இரக்கம் காட்டினார் என்பதை கீழ்காணும் திருவிவிலிய வசனங்களின் ஊடாக கண்டு கொள்ளலாம்.

காயின் ஆண்டவரிடம் "எனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்னால் தாங்க முடியாதாக இருக்கின்றது. இன்று நீர் என்னை இம் மண்ணிலிருந்து துரத்தி இருக்கின்றீர்; உமது முன்னிலையினின்று நான் மறைக்கப்பட்டுள்ளேன். மண்ணுலகில் நான் நாடோடியாக அலைந்து திரிய வேண்டியுள்ளது. என்னைக் காண்கின்ற எவனும் என்னைக் கொல்வானே!" என்றான். ஆண்டவர் அவனிடம் "அப்படியன்று காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான்" என்று சொல்லி, காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்.

(தொநூ 4.13-15)

மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதி மூலம் யாராவது காயினைக் கொன்றால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனை ஏழு மடங்கு அதிகமாகும். என்பது காட்டப்படுகிறது. குற்றவாளியினுடைய வாழ்வுரிமை இறைவனுக்கு சொந்தமானதாகும். மற்றவர்களை நாம் நியாயம் தீர்க்க எமக்கு உரிமை இல்லை. இறைவன் காயின் மேல் வைத்த அடையாளம் தண்டனைக்கானதல்ல. மாறாக அது இறைவனுடைய பாதுகாப்பின் அடையாளமாகும்.

இந்நிகழ்வு வழியாக இறைவன் தம் பக்கமாக திரும்பி, வேண்டுதல் செய்கிற பாவிக்குக் கூட அவர் தயவு, கருணை காட்டுபவர் என்பது வெளிக்காட்டப்படுகிறது. எனவே நாமும் எப்பொழுதும் பாவத்தை விட்டு விலக வேண்டும். எரிச்சல், பொறாமை, கொலை ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதும் சகோதர அன்பில் நாங்கள் நிலைத்திருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. காயின், ஆபேல் கதைமூலம் உமது வாழ்க்கைக்கு கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் மூன்று தருக.

2. நாம் தவறு செய்யும் பொழுது எங்களுக்கு அறிவுரை கூறும் நால்வகை நபர்களைக் குறிப்பிடுக.

3. எரிச்சலை வெற்றி கொள்ள நீர் செய்யக் கூடிய செயற்பாடுகள் மூன்று தருக.

## வாழ்க்கைக்கு

- ✞ மற்றவர்கள் மேல் எரிச்சல் பொறாமை கொள்ளாதிருப்போம்.
- ✞ சரியான வழியை காண்பிப்பவர்களுக்கு செவிகொடுப்போம்.
- ✞ எப்பொழுதும் சகோதர அன்புடன் வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 பெருவெள்ளமும் நோவாவுடன் உடன்படிக்கையும்



8:1 நோவாவின் பேழை

நோவாவின் காலத்தில் கடவுள் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது, பூவுலகு வன்முறையால் நிறைந்திருந்தது. கடவுள் மண்ணுலகை உற்று நோக்கினார். இதோ! அது சீர்கெட்டுப் போயிருந்தது. மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீயவழியில் நடந்து வந்தனர்.

(தொநூ 6:11-12)

மனித பாவத்தின் விளைவாகவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதென மேற்குறிப்பிட்டுள்ள திருவிவிலியப்பகுதியில் இருந்து விளங்கிக் கொள்ளலாம். மனிதர் செய்யும் பாவத்தினால் இறைவனே துக்கப்படுகிறார் என்றும், அதனால் அவர் மனிதரைத் தண்டிக்கிறார் என்றும் திருவிவிலிய ஆசிரியர் காண்பிக்கின்றார். அதி உன்னத படைப்பாகிய மனிதன் செய்யும் பாவம் எல்லாப் படைப்புகளையும் அழித்துத் தாக்கும் முறை, வெள்ளப்பெருக்கு கதை மூலம் எமக்குக் தரப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது கடவுள் நோவாவிடம் பின்வருமாறு கூறினார். எனது முன்னிலையிலிருந்து மனிதர் எல்லாரையும் ஒழித்துவிடப்போகிறேன். ஏனெனில், அவர்களால் மண்ணுலகில் வன்முறை நிறைந்திருக்கின்றது. இப்பொழுது நான் அவர்களை மண்ணுலகோடு அழிக்கப்போகிறேன்.

(தொநூ 6:13)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருவிவிலியப் பகுதியினூடாக பெருவெள்ளத்தின் நோக்கமானது மனிதனை அழிப்பது அல்ல, மாறாக மனித குலத்தில் பெருகிய தீமையை இல்லாது ஒழிப்பதே ஆகும் என்பது காட்டப்படுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே காட்டப்பட்டுள்ள படத்தின் வாயிலாக தற்கால சமுதாயத்தில் காணப்படும் பாவச் செயல்களை நாம் கண்டுணர முடிகின்றது. இப்பாவச் செயல்கள் படைப்பனைத்தையும் அழிவை நோக்கி கொண்டு செல்வதற்கான காரணிகளாகும். இப்பாவச் செயல்களை ஒழிப்பதற்கு நாம் என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்ப்போம். நாம் எப்பொழுதும் பாவச் செயல்களை தவிர்க்க முயற்சி எடுக்க வேண்டும்.



8.2 நோவாவும் புதல்வர்களும்

நோவாவுக்கு ஆண்டவரின் அருள் பார்வை கிடைத்தது. நோவாவின் வழி மரபினர் இவர்களே. தம் காலத்தவருள் நோவா நேர்மையானவராகவும், குற்றமற்றவராகவும் இருந்தார். நோவா கடவுளோடு நடந்தார். நோவாவிற்கு சேம், காம், எப்பேத்து என்னும் மூன்று புதல்வர் பிறந்தனர்.

(தொநூ 6:8 -10)

பாவம் படிப்படியாக உலகம் முழுவதும் வளர்ந்து அழிவிற்கு இட்டுச் சென்றாலும் இறைவன் மனிதனை விடுதலையாக்க புதிய வழியைத் திறந்தார். பாவத்தின் கொடுமையினால் படைப்புக்களை அழிக்க இறைவன் தீர்மானித்தாலும் நோவாவின் குடும்பமும் எல்லா மிருகங்களும் காப்பாற்றப்பட்டதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய தயவும் இரக்கமும் காண்பிக்கப்படுகின்றது. ஆகவே நோவா புதிய படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக தெரிவு செய்யப்படுகிறார். நோவா நேர்மையாளராக இருந்ததாலேயே இறைவன் அவரை தெரிவு செய்தார்.

நோவாவைப் போல் நாங்களும் நேர்மையானவர்களாகவும், குற்றமற்ற வர்களாகவும் வாழவேண்டும். அதே போல் உண்மை உள்ளவர்களாகவும் வாழ வேண்டும். நோவா நீதிமானாக (நேர்மையாளராக) வாழ்ந்தது போல நாங்களும் நீதிமான்களாக வாழவேண்டும். அப்பொழுதுதான் எங்களுக்கு இறைவனின் இரக்கம் கிடைக்கும்.



8.3 வெள்ளப் பெருக்கு

நோவாவின் வாழ்க்கையின் அறுநூறாம் ஆண்டின் இரண்டாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று பேராழத்தின் ஊற்றுகள் எல்லாம் பீறிட்டெழுந்தன. வானங்களின் மதகுகள் திறக்கப்பட்டன.

(தொநூ 7:11)

இறைவன் நோவாவிற்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேறியது. நோவாவும் பெருவெள்ளத்தில் இருந்து தப்பினார்.

நோவாவிற்கு இருந்த மேன்மையான நற்குணங்களால் இறைவன் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோக்கி தம் அன்புக்கரத்தினால் அவரை ஆசீர்வதித்தது பற்றி திருவிவிலியம் தெளிவாகக் காண்பிக்கின்றது. இறைவனின் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நோவாவின் வாழ்க்கையில் இருந்து எக்காலத்திற்கும் உரிய முன்மாதிரிகையை நாம் பின்பற்ற வேண்டும்.

ஆண்டவர் நறுமணத்தை நுகர்ந்து, தமக்குள் சொல்லிக் கொண்டது: மனிதரை முன்னிட்டு நிலத்தை இனி நான் சபிக்கவே மாட்டேன். ஏனெனில் மனிதரின் இதயச் சிந்தனை இளமையிலிருந்து தீமையை உருவாக்குகின்றது. இப்பொழுது நான் செய்தது போல இனி எந்த உயிரையும் அழிக்கவே மாட்டேன்.

(தொநூ 8:21)

வெள்ளப் பெருக்கின் பின் உலகில் பாவம் இன்னும் தொடர்ந்து இருந்தது. இனிமேல் தண்ணீரால் உலகை தாம் அழிப்பதில்லை என்று இறைவன் தீர்மானித்து வாக்குறுதி கொடுத்தார். அந்த வாக்குறுதி கீழேயுள்ள திருவிவிலியப் பகுதி மூலம் காட்டப்படுகிறது. இறைவனுடைய பாதுகாப்பும் வாக்குறுதியும் இனிமேல் பாவத்தில் விழும் மனிதனுக்கு அவரது இரக்கத்தினால் கிடைக்கும் என்பது நிச்சயமாகும்.

எனக்கும் உங்களுக்கும் சதையுள்ள உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் இடையே உள்ள என் உடன்படிக்கையை நான் நினைவுகூர்வேன். உயிர்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்குத் தண்ணீர் இனி ஒரு போதும் பெருவெள்ளமாக மாறாது.

(தொநூ 9:15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8.4 வெள்ளப் பெருக்கின் பின்

அப்பொழுது கடவுள், "எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற்குமிடையே தலைமுறை தோறும் என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கும்.

(தொநூ 9:12 - 13)

இறைவன் படைப்பனைத்துடனும் உடன்படிக்கை செய்தார். அந்த உடன்படிக் கையின் அடையாளமாக வானவில் காணப்படுகிறது. அது இறைவன் மனிதனுடன் செய்து கொள்ளும் தனிப்பட்ட உடன்படிக்கையின் அடையாளம் ஆகும். மனிதன் பாவம் செய்தாலும், அவனுக்கு எந்தவித தீங்கும் செய்யாதிருக்க இறைவன் வாக்கு கொடுக்கிறார்.

புயலும் மழையும் முடிவடைந்த பிறகு வானவில் தோன்றும். இது இறைவனுடைய பாதுகாப்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டிலே இறைவனின் இரக்கம், தயவு, அன்புக்கு அடையாளமாக வானவில் விளங்குகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மனிதனுடன் தன்னுடைய தொடர்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக, இனி தண்ணீரால் உலகை அழிக்கப் போவதில்லை என்று வாக்குறுதி கொடுக்கிறார். இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட, உடன் படிக்கையின் வெளியடையாளம் வானவில் ஆகும்.

இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வாக்குறுதியை நிறைவேற்றினார். நாமும் எப்பொழுதும் மற்றவர்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று இத் திருமறைப் பகுதி எமக்கு கற்பிக்கிறது. வீட்டில், பாடசாலையில், பங்கில் நாம் தொடர்பு கொள்ளும் நபர்களுக்கு கொடுக்கும் வாக்குறுதியை நாம் நிறைவேற்ற வேண்டும்.

## செயற்பாடு

1. இன்று சமுதாயத்தில் காண்கின்ற பாவச் செயலை ஒழிப்பதற்கு பாடசாலை மாணவனான நீர் எடுக்கக் கூடிய 5 நடவடிக்கைகள் தருக.

2. பங்கிலே இறைஇரக்கத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டக் கூடிய 3 செயல்முறைகளை எழுதுக.

3. உமது பெற்றோர், ஆசிரியர், நண்பர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முறையை கீழ்க்காணும் அட்டவணையில் பூரணப்படுத்துக.

| நபர்கள் | வாக்குறுதி | நிறைவேற்றும் முறை |
|---|---|---|
| 1. பெற்றோர் | 1. ................................ | 1. ...................................... |
| 2. ஆசிரியர்கள் | 2. ................................ | 2. ...................................... |
| 3. நண்பர்கள் | 3. ................................ | 3. ...................................... |

4. நோவாவின் வாழ்க்கையிலிருந்து நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் மூன்று தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

- ✞ பாவத்தை தவிர்ப்போம்
- ✞ மற்றவர்களுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவோம்.
- ✞ நேர்மையாக வாழப் பழகுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 நீதித் தலைவர்கள்

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். அந்த நாட்டில் குடியேறிய பின், அவர்களைச் சுற்றியிருந்த பிற இனத்தாரால் அவர்கள் கஷ்டங்கள், துன்பங்கள், பிரச்சினைகள் என்பவற்றை எதிர்கொள்ள நேரிட்டது. பிற இனத்தாரின் ஆக்கிரமிப்புக்களிலும், தாக்கங்களிலுமிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்து; அவர்களது வாழ்வை வளமாக்குவதற்காகவே, இறைவன் நீதித்தலைவர்களைத் தெரிந்தெடுத்தார். ஆண்டவர் நீதித் தலைவர்களை ஏற்படுத்தியது பற்றி, திருமறை நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் நீதித்தலைவர்களை எழச்செய்தார். அவர்கள், அவர்களைக் கொள்ளையடித்தவர்களின் கைகளிலிருந்து விடுவித்தனர்.

(நீத2:16)

கிமு 1200 - கிமு 1050 வரையான காலப்பகுதியிலேயே நீதித்தலைவர்கள் வாழ்ந்தார்கள். நீதித்தலைவர்களின் காலத்திலே அவர்களது தலைமைத்துவம் இஸ்ரயேல் மக்கள் மட்டில் மட்டும் இருக்கவில்லை. இஸ்ரயேல் மக்கள் முகங்கொடுத்த போர்கள் மத்தியில் தலைமைத்துவம் வகித்து, யூத இனமக்களை ஓரின மாக்குவதற்கு அடித்தளம் அமைப்பதே நீதித்தலைவர்களின் பணியாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் அவர்களுக்காக நீதித் தலைவர்களை எழச்செய்த பொழுதெல்லாம் அவர் அந்தத் தலைவர்களுடன் இருந்து, அத்தலைவர்களின் வாழ்நாள் முழுவதும் எதிரிகளின் கையிலிருந்து மக்களை விடுவித்தார். ஏனெனில் துன்புறுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்ட அவர்களின் அழுகுரலைக் கேட்டு ஆண்டவர் அவர்கள் மீது இரக்கம் கொண்டார்.

(நீத2:18)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதியிலிருந்து இறைவன் யூதமக்களைப் பாதுகாப்பதற்கு நீதித்தலைவர்களை ஏற்படுத்தியது மட்டுமல்லாது அவர்களோடு கூட இருந்து யூத மக்களின் விடுதலைக்காக செயற்பட்ட விதமும் காட்டப்படுகிறது. திருவிவிலியத்தில் உள்ள 12 நீதித்தலைவர்களின் பெயர்களாவன.

1. ஒத்னியேல்
2. ஏகூது
3. சம்கார்
4. தெபோரா
5. கிதியோன்
6. தோலா
7. ஜாயீர்
8. ஜெப்தா
9. இப்சான்
10. ஏலோன்
11. அப்தோன்
12. சிம்சோன்

## தெபோரா என்ற நீதித்தலைவி



6.1 தெபோரா என்னும் நீதித்தலைவி

தெபோரா என்னும் பெண் ஞானமுள்ளவளாக இருந்தாள். அவளது காலத்தில் கானானிய அரசர்கள் இஸ்ரயேலரைத் துன்பப்படுத்தினார்கள். இந்த வேளையில் இஸ்ரயேலர் இறைவனை நோக்கி முறையிட்டனர். தெபோராவின் அறிவுரையின் படி பாராக் என்னும் படைத்தளபதி பத்தாயிரம் யுத்தவீரரை கானானியருக்கு எதிராக போர்புரிய அழைத்துச் சென்றான். பாராக் தாபோர் மலைக்கு வந்ததை அறிந்த கானானியர் இஸ்ரயேலரோடு யுத்தம் புரிய ஆயத்தமானார்கள். கானானியப் படைக்கு எதிராக யுத்தம் புரிய இஸ்ரயேலரின் படைத்தலைவன் பாராக்கை தெபோரா ஊக்கப்படுத்தினாள். இறையருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேல் படை வெற்றி பெற்றது. இந்த வெற்றி இஸ்ரயேல் படையின் வெற்றி அல்ல. அந்த வெற்றியைப் பெற்றுத் தந்தவர், இறைவனே என்று தெபோரா அவர்களுக்கு விளக்கிக் கூறினாள்.

## கிதியோன் என்ற நீதித்தலைவன்



9.2 கிதியோன் என்ற நீதித்தலைவன்

நாற்பது வருட காலம் நிலவிய சமாதானத்துக்குப் பிறகு, மீண்டும் யூத மக்கள் இறைவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியால் இறைவன் அவர்களை மிதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். அவர்களால் யூத மக்கள் துன்புறுத்தப் பட்டனர். இந்த வேளையில் யூதமக்கள் இறைவனை நோக்கி முறையிட்ட போது, இறைவன் நீதித் தலைவராக கிதியோனை தெரிந்தெடுத்தார்.

ஆண்டவரின் தூதர் அவருக்குத் தோன்றி, ''வலிமை மிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்''.

ஆண்டவர் கிதியோன் பக்கம் திரும்பி ''உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய். மிதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நானல்லவா? என்றார்.

(நீ.த 6:12,14)

கிதியோன் இஸ்ரயேலர் பொய்த் தேவர்களுக்கு அமைத்திருந்த எல்லாப் பலி பீடங்களையும் தகர்த்தெறிந்து, போருக்குச் செல்வதற்கு படைகளைச் சேர்த்துக் கொண்டார். ஆனாலும் இறைவனின் கட்டளைப்படி 300 பேரை யுத்தத் திற்காகத் தெரிந்தெடுத்தார். கிதியோனின் அறிவுரைப்படி, யுத்த வீரர்கள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதியானியரின் பாளையத்திற்குச் நெருப்புப் பந்தங்களை ஏந்திச் சென்ற பானைகளை உடைத்து எக்காளங்களை ஊதினார்கள். குழப்ப மடைந்த மிதியானியப்படை தங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் வாளால் குத்திக் கொன்றார்கள்.

## சாமுவேல் என்னும் நீதித்தலைவர்



9.3 சாமுவேல் என்னும் நீதித்தலைவர்

சாமுவேல் தம் வாழ்நாள் முழுவதும், இஸ்ரயேலுக்குத் தலைவராய் இருந்தார். அவர் ஆண்டு தோறும் சுற்றுப்பயணம் செய்து, பெத்தேல், கில்கால் மிஸ்பா ஆகிய இடங்களிலெல்லாம், இஸ்ரயேலுக்கு நீதி வழங்கினார். பின்பு அவர்தம் வீடு இருந்த இராமாவுக்குத் திரும்பி, அங்கேயும் இஸ்ரயேலருக்கு நீதி வழங்கினார். அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் எழுப்பினார்.

(1 சாமு 7 : 15 - 17)

- சாமுவேல் கடைசி நீதித்தலைவர்.
- முதலாவது இறைவாக்கினர்.
- சாமுவேல் ஒரு குரு.
- சவுலையும், தாவீதையும் அரசர்களாக திருப்பொழிவு செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9.4 சாமுவேல் சவுலை திருப்பொழிவு செய்தல்



9.5 சாமுவேல் தாவீதை திருப்பொழிவு செய்தல்

நீதித்தலைவர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் :

- இறைவன் என்றும் எம்மோடு இருக்கிறார் என நம்புதல்.
- சவால்கள் மத்தியில் நீதித்தலைவர்களைப் போல் இறைவனிடத்தில் வேண்டுதல்.
- மற்றவர்களுடைய நன்மைக்காக செயற்படுதல்.
- மற்றவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளில் உதவிசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. நீதித் தலைவர்கள் பன்னிருவரின் பெயர்களைத் தருக.

2. நீதித்தலைவர்களின் முக்கிய பணிகள் எவை?

3. பிறரின் நன்மைக்காக பாடசாலையில் நீர் செய்யக் கூடிய செயல்கள் மூன்று எழுதுக.

## வாழ்க்கைக்கு

பிறரின் நன்மைக்காக எப்பொழுதும் செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 அரசர்கள்

இஸ்ரயேல் மக்களுக்கு பல்வேறுபட்ட சவால்கள் ஏற்பட்ட பொழுதெல்லாம் வல்லமை மிக்க அரசர்களுக்கு கீழே இயங்குவதற்கு தேவையான அவசியத்தை அவர்கள் உணரத் தொடங்கினர். சிதறிக் கிடந்த இஸ்ரயேல் கோத்திரங்களை எல்லாம் ஒன்று சேர்த்து, வலிமை மிகுந்த ஒரு இனமாக உருவாக்குவதற்கு ஒரு தலைவர் தேவை என்பதை இஸ்ரயேலர் விளங்கிக் கொண்டனர். இந்த விடயம் குறித்து தமது கருத்தை சாமுவேலிடம் தெரிவித்தனர். சாமுவேல் இஸ்ரயேலர் கொண்டுவந்த இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் இஸ்ரயேல் மக்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஓர் அரசரை நியமிக்கும்படி இறைவன் சாமுவேலிடம் கூறினார்.

எனவே, இஸ்ரயேலின் பெரியோர் அனைவரும் ஒன்று கூடிச் சாமுவேலிடம் இராமாவுக்கு வந்தனர். அவர்கள் அவரிடம், ''இதோ உமக்கு வயது முதிர்ந்துவிட்டது. உம் புதல்வர்கள் உம் வழிமுறையில் நடப்பதில்லை. ஆகவே, அனைத்து வேற்றினங்களிடையே இருப்பது போன்று ஓர் அரசனை நியமித்தருளும்'' என்று கேட்டுக் கொண்டனர். 'எங்களுக்கு நீதி வழங்க ஓர் அரசனைத் தாரும்' என்று அவர்கள் கேட்டது, சாமுவேலுக்குத் தீயதெனப்பட்டது. சாமுவேல் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டார். ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது; ''மக்கள் குரலையும், அவர்கள் உன்னிடம் கூறுவது அனைத்தையும் கேள். ஏனெனில், அவர்கள் உன்னைப் புறக்கணிக்கவில்லை. அவர்களை நான் ஆளாதபடி என்னைத் தான் புறக்கணித்துவிட்டனர். நான் அவர்களை எகிப் தினின்று கொண்டுவந்த நாள் முதல் இந்நாள்வரை, அவர்கள் என்னைப் புறக்கணித்து வேற்றுத் தெய்வங்களுக்கு ஊழியம் செய்து அனைத்திலும் அவ்வாறே செய்ததுபோல் உனக்கும் செய்கிறார்கள். இப்போது அவர்கள் குரலுக்குச் செவிகொடு. ஆனால் அவர்களைக் கண்டித்து எச்சரி. அவர்களை ஆளப்போகும் அரசனின் உரிமைகளைத் தெரியப்படுத்து''

*(1சாமு 8 : 4 - 9)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10.1 சவுல் அரசன்

இஸ்ரயேல் வரலாற்றிலே முதல் அரசன் சவுல் ஆவார். முதல் அரசர் என்னும் உரிமையை பெற்ற இளைஞன் சவுல் பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த கீஸ் என்பவரின் மகன் ஆவார். தனது தந்தையின் கழுதையைத் தேடிப் போன சவுலை, எதிர்பாராத விதமாக சாமுவேல் சந்தித்தார். அவரை இறைவனின் கட்டளைப்படி, சாமுவேல் அரசராக திருப்பொழிவு செய்ததை படத்தில் காணமுடிகிறது.

அப்போது சாமுவேல் தைலக் குப்பியை எடுத்து, அவர் தலைமீது வார்த்து அவரை முத்தமிட்டு கூறியது; "ஆண்டவர் நம் உரிமைச் சொத்துக்கு தலைவனாக இருக்கும் படி உன்னைத் திருப் பொழிவு செய்துள்ளார் அன்றோ?"

(1 சாமு 10:1)

அம்மோனிய அரசனாகிய நாகாஸ், யூதா நாட்டிலிருந்த மக்களுடைய கண்களைப் பிடுங்கி உடன்படிக்கை செய்வதற்கு ஆயத்தமாகிறதைக் கேட்ட சவுல், யூதா நாட்டு மக்கள் அனைவரையும் யுத்தத்துக்காக ஒன்று கூட்டினான். அம்மோனியருக்கு எதிரான அந்த யுத்தத்தில் சவுல் வெற்றி பெற்றார்.

அதற்குப் பின் பிலிஸ்தியரால் ஏற்பட்ட எதிர்ப்புக்கு முகங் கொடுக்க வேண்டியவரானார். சவுல் அரசனின் மகனான யோனத்தனின் தந்திரமான செயலால் பெலிஸ்திய சேனையை தோற்கடிக்க முடிந்தது. சவுலின் ஆட்சிக் காலம் மழுவதும் அவர் பிலிஸ்தியரோடே யுத்தம் செய்ய நேரிட்டது. காலப் போக்கில் சவுல் வலிமை வாய்ந்த யுத்த படையை உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேலின் முதல் அரசராக நியமிக்கப்பட்ட சவுல் தன் இனத்துக்கு விரோதமாக இருந்த எதிரிகளைத் தோற்கடித்தார். சவுல் அரசன் இஸ்ரயேல் நாட்டை ஒன்றிணைத்து வலிமை மிக்க அரசாகக் கட்டியெழுப்பியவர்களுள் முதன்மையான வராகக் காணப்படுகிறார். சவுல் அரசன் பெலிஸ்தியருடனான யுத்தத்தின் போது கொல்லப்பட்டார்.

## தாவீது அரசன்



9.2 தாவீது அரசன்

இறைகட்டளைக்கு கீழ்ப்படியாத சவுல் அரசனுக்குப் பதிலாக வேறு ஒரு அரசனை நியமிக்கும்படி இறைவன் சாமுவேலுக்குக் கட்டளையிட்டார். இறை வழிநடத்தலால் சாமுவேல் பெத்தேலுக்குச் சென்றார். அங்கு வாழ்ந்த யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஈசாயி என்பவரின் வீட்டுக்குச் சென்றார். அங்கே ஈசாயியின் புத்திரர்களுக்குள் அரசர் ஒருவரைத் தெரிவு செய்ய எதிர்பார்த்தார். சாமுவேல் மூத்த மகனைக் கண்டவுடன் இவன் தகுதியானவன் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். அப்போது ஆண்டவர் சாமுவேலிடம் ''அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே; ஏனெனில் நான் அவனைப் புறக்கணித்து விட்டேன். மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர். ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்'' என்றார். (1 சாமு 16:7)

ஈசாயியின் புதல்வர்கள் ஏழுபேரும் சாமுவேலுக்கு முன்பாகக் கொண்டுவரப் பட்டனர். அதில் ஒருவரையும் இறைவன் தெரிந்து கொள்ளவில்லை. ஈசாயி ஆளனுப்பி ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை வரவழைத்தார். அவர் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றத்துடன் இருந்தான். ஆண்டவர் சாமுவேலிடம் ''தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்'' எனக் கட்டளையிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது. சாமுவேல் இராமாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

(1 சாமு 16:13)

சவுல் அரசனின் படை பிலிஸ்தியர்களுக்கு எதிராகக் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. தாவீதின் மூன்று சகோதரர்கள் யுத்த சேனையில் சேர்ந்திருந்தார்கள். ஒரு நாள் ஈசாயி தன் மகன் தாவீதை அழைத்து, சகோதரர்களிடம் சென்று அவர்களுக்கு உணவைக் கொடுத்து அவர்களின் சுகதுக்கங்களை விசாரித்து வரும்படி கூறினார். இக்காலப் பகுதியில் பிலிஸ்தியர், இஸ்ரயேலுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் தலைவர் ''கோலியாத்'' என்ற வீரன் ஆவான். இஸ்ரேயல் இனத்தவரை அவனோடு போர்புரிய வரும்படி அவன் சவால் விட்டான். தாவீது மட்டும் அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு இறைவனின் பெயரில் போர் புரிய முன்வந்தான். அவன் ஐந்து கூழாங்கற்களும், கவணும் மட்டுமே கொண்டுசென்றான்.

அப்பொழுது தாவீது பொலிஸ்தியனிடம் நீ வாளோடும் ஈட்டியோடும் எறிவேலோடும் என்னிடம் வருகிறாய்; நானோ நீ இகழ்ந்த இஸ்ராயேலின் படைத்திரளின் கடவுளாகிய படைகளின் ஆண்டவர்தம் பெயரால் வருகிறேன்.

(1 சாமு 17:45)

தாவீது பெலிஸ்தியனை நோக்கி ஓடி, பையில் கை போட்டு அதிலிருந்து ஒரு கல்லை, கவணில் வைத்து வீசினான். அந்தக்கல் கோலியாத்தின் நெற்றிக்குள் சென்றது. அவன் முகங்குப்புற வீழ்ந்தான். தாவீது பொலிஸ்தியனான கோலியத்தின் உறையிலிருந்து வாளை உருவி, அவனை வெட்டிக் கொன்றான். பெலிஸ்தியர் தங்களுடைய வீரன் இறந்ததைக் கண்டு, திரும்பி ஓடினார்கள். அன்று பிலிஸ்தியர் படுதோல்வி அடைந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாவீது பாவத்தில் விழுதல்

தாவீது அவள் யார் என்று கேட்க, ஆளனுப்பினார். ''அவள் எலியாவின் மகளும் இத்தியர் உரியாவின் மனைவியுமான பத்சேபா'' என்று கூறினார். தாவீது தூதரை அனுப்பி அவளை வரவழைத்தார்.

(2 சாமு 11:3-4)

அவன் அவளுடன் தவறான உறவை வளர்த்தான். அந்தப் பெண் கருவுற்று, நான் கர்ப்பவதியாயிருக்கிறேன் என தாவீதுக்குச் சொல்லியனுப்பினாள்.

இறைவாக்கினரான நாத்தான் தாவீது அரசருக்கு ஒரு உவமை மூலமாக அவரது தவறைச் சுட்டிக்காட்டினார். அவர் சாதுரியமாக தாவீது அரசர் செய்த தவறைக் காண்பித்து, அவரை நல்வழிப்படுத்தினார். இறைவாக்கினரான நாத்தானைப் போல, நாங்களும் மற்றவர்கள் தவறு செய்யும் போது அந்தத் தவறை அவர்களுக்குக் காண்பித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

### தாவீது மனம் வருந்துதல்

அப்போது தாவீது நாத்தானிடம், ''நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்'' என்று சொன்னார். நாத்தான் தாவீதிடம், ஆண்டவரும் உனது பாவத்தை நீக்கிவிட்டார்.

(2 சாமு 12:13)

தாவீது அரசர் உடனே தன் தவறை ஏற்றுக் கொண்டு ''நான் இறைவனுக்கு விரோதமாக பாவம் செய்தேன்'' என்றார். தாவீது அரசர் தான் செய்த குற்றத்தை உணர்ந்து கொண்டு மனந் திரும்பினார். அவர் தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு தன்னைத் தாழ்த்தினார். தாவீது தன் தவறை உணர்ந்து மனம் வருந்தி இயற்றிய சங்கீதத்தை திருப்பாடல் 51 ல் காணலாம். நாமும் எம்முடைய பாவத்துக்காக மனம் வருந்தி, பாவத்தை வெற்றிகொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருப்பாடலை திருவிவிலியத்திலிருந்து வாசித்து தியானிக்கவும்.

## சாலமோன் அரசன்



9.3 சாலமோன் அரசன் எருசலேம் ஆலயத்தைக் கட்டியது

தாவீது அரசருக்குப் பின் அவரது மகன் சாலமோன் அரசராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். அரசராகி ஆரம்ப காலத்திலேயே சாலமோன் மிகவும் அழகிய தேவாலயத்தை எருசலேம் நகரில் கட்டி எழுப்பினார்.

அப்போது ஆண்டவரின் வாக்கு சாலமோனுக்கு உரைக்கப்பட்டது. அவர், ''நீ என் நியமங்களின்படி ஒழுகி, என் நீதிச்சட்டங்களின் படி செயலாற்றி, என் கட்டளைகளைக் கடைப்பிடித்து நடந்து வருவாயாகில், நீ கட்டுகிற இக் கோவிலைக் குறித்து நான் உன் தந்தை தாவீதுக்குச் சொன்ன என் வாக்கை உன்னிடம் நிறைவேற்றுவேன். இஸ்ரயேல் மக்களிடையே குடியிருப்பேன்; என் மக்களாகிய இஸ்ரயேலரைக் கைவிடமாட்டேன்'' என்றார்.

(1 அர 6:11 - 14)

மிகவும் சிறந்த கட்டடமான எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு ஏழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் எடுத்தன. ஆலயம் கட்டி முடித்த பின் ஆலய அபிஷேக விழா கொண்டாடி, இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

சவுல், தாவீது, சாலமோன் ஆகிய அரசர்கள் இஸ்ரயேல் மக்களை ஒரு அரசின் கீழ் இணைத்தனர். நல்ல தலைவர்களாக அவர்கள் நாட்டை ஆட்சி செய்தனர். திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட நாமும் முன்மாதிரிகையான தலைவர்களாக எப்பொழுதும் செயற்பட வேண்டும். நாங்கள் தவறு செய்த போது தாவீது அரசரைப் போல் எங்களுடைய தவறுக்காக மனம் வருந்த வேண்டும். நாங்களும் பாவத்தை வெற்றிகொள்ள இறையருளைக் கேட்க வேண்டும்.

## செயற்பாடு

1. இஸ்ரயேலை ஆட்சி செய்த முதல் மூன்று அரசர்களது பெயரையும் தருக.
2. எருசலேம் தேவாலயத்தைக் கட்டிய அரசன் யார்?
3. தாவீது அரசரிடமிருந்து உமது வாழ்வுக்கு எடுக்கக் கூடிய வழிகாட்டல்கள் இரண்டு தருக.

## வாழ்க்கைக்கு

முன் மாதிரிகையான கிறிஸ்தவ தலைவராகச் செயற்படுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 நேர்மையான வாழ்வு



நிலத்தில் நன்றாக வேரூன்றி செழிப்பாக வளர்ந்து பலன் தரும் மரம்

மரத்தின் வேர் உறுதியாக நிலத்தில் ஊன்றிப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பது போல், நாங்களும் எமது அருள்வாழ்வில்தான் எமது கிறிஸ்தவ வாழ்க்கையை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். வெள்ளம், சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள் அம்மரத்தைப் புரட்டிவிட முடியாது. அதுபோல நன்மையான வாழ்க்கை வாழ்ந்தால் பாவம் என்ற எதிரி எங்களை அழிக்க முடியாது. மரம் நன்றாக வளர்ந்து கனி கொடுப்பது போல, நேரிய வாழ்க்கை வாழ்ந்தால் எங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அதிகரித்து நாமும் பலன் கொடுப்பவராக மாறுவோம். பாவம் எம்மைப் பற்றிக் கொண்டால் பாவம் நம் வாழ்வை அழிக்கும். எவ்வளவு கஷ்டம் என்றாலும் பாவ சந்தர்ப்பங்களை அகற்ற வேண்டும். இதனால் நன்மை பயக்கும்.

எந்த வேளையிலும் பாவம் எங்களைத் தாக்கமுடியும். அதிலிருந்து விலகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்காக பரிசுத்த திருச்சபை அந்தப் பாவ சந்தர்ப்பங்களை எமக்கு விளக்கிக் காட்டுகிறது. அவற்றை அறிந்து கொள்வோம்.

### சென்ம பாவம்

நம் ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தினால் நமது பிறப்பிலேயே நமக்கு உரிமையாகும் பாவ இயல்பு சென்ம பாவமாகும்.

(பெரிய குறிப்பிடம் 209)

திருமுழுக்கினால் சென்ம பாவம் நீக்கப்படுகிறது.

### கன்ம பாவம்

முழு அறிவுடனும், விருப்புடனும் பாரியதொரு விடயத்தில் இறைவனின் கட்டளையை மீறுவதென்பது கன்ம பாவமாகும்.

(பெரிய குறிப்பிடம் 212)

கன்ம பாவமானது அற்பாவம், சாவான பாவம் என இருவகைப்படும்.

### சாவான பாவத்துக்குரிய காரணங்கள்

**1. முழுமையான அறிவு :**

ஏழு வயதுக்கு முன்பு செய்த தவறு சாவான பாவமல்ல.

**2. தவறைச் செய்ய முழுமையான விருப்பம் :**

எந்தவொரு நபரினதும் வற்புறுத்தலால், விருப்பம் இல்லாமல் செய்யும் தவறு சாவான பாவமல்ல; ஆனாலும் அது தவறாகும்.

**3. கனமான செயல் :**

பகிடியாகச் சொல்லும் பொய் கனமான விடயமாக இல்லாவிடினும் அப்பொய் சொல்லப்படும் சந்தர்ப்பம், இடத்தைப் பொறுத்து அது கனமான செயலாக மாற வாய்ப்புண்டு உதாரணமாக நீதிமன்றத்தில் சொல்லப்படும் பொய் கனமான செயலாக கருதப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **இறை கட்டளையை மீறுதல் :**

பாடசாலைக்கு நேரம் சென்று போவது, இறைகட்டளையை மீறுவது, ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாமலிருப்பது போன்ற செயல்கள் இறைகட்டளையை மீறுவதற்கு உதாரணமாகும். ஆனாலும் அது தவறாகும்.

| அற்ப பாவத்தினால் வரும் விளைவுகள் | சாவான பாவத்தினால் வரும் விளைவுகள் |
|---|---|
| 1. இறையருள் கிடைக்காவிட்டாலும் ஆன்மீக வாழ்க்கை குலைந்து விடும். | இறைவனோடு கொண்டுள்ள நட்புறவு முறிந்து போகும். |
| 2. சாவான பாவத்தை வெற்றி கொள்வதற்கு எங்களுக்குள் இருக்கும் வல்லமை சீர்குலைந்து விடும். | எங்களது ஆன்மீக வாழ்க்கை அழிவடையும். |
| 3. இந்த உலகத்திலாவது உத்தரிக்கிற ஸ்தலத்திலாவது தற்காலிகமான துன்பம் கிடைக்கும். | இறையருளை இழந்து நரகத்திற்கு செல்ல நேரிடும். |

பாவம் சிறிதாக இருந்தாலும், அதிலிருந்து விடுபட முயற்சி எடுக்க வேண்டும். காய்ச்சல் வந்தும் அதனைக் கவனியாது விடின் அக்காய்ச்சல் நிமோனியாவாக மாறிவிடும். அது மரணத்தையும் கொண்டுவரும். அற்ப பாவம் கூட சாவான பாவத்துக்கு இட்டுச் சென்று ஆன்மீக வாழ்வை இழக்கச் செய்யும் நிலைக்கு உட்படுத்தும்.

தலையாய பாவம் ஏனைய பாவங்களுக்குக் காரணமாக அமைகிறது. தலையாய பாவங்கள் ஏழுவகைப்படும். அவற்றைத் தவிர்க்க ஏழு நற்குணங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தலையாய பாவங்கள் | பாவத்தை நீக்க வளர்க்க வேண்டிய நற்குணங்கள் |
|---|---|
| 1. அகங்காரம்<br>(தன் உயர்வை மேலாக கருதுதல்) | 1. தாழ்மை<br>(தன்னைப் புகழாது இருத்தல்) |
| 2. பேராசை<br>(உலக செல்வங்களுக்கும், பணத்துக்கும் இருக்கும் ஆசை) | 2. தியாகம்<br>(பிரதிபலன் எதிர்பார்க்காமல்) |
| 3. மோகம்<br>(தீய நாட்டங்களை செய்ய விருப்பம்) | 3. கற்பு<br>(மோக உணர்விலிருந்து மீள்தல்) |
| 4. பகை<br>(தனக்கு விருப்பமில்லாத நபர்மீது கொள்ளும் வெறுப்பு) | 4. அமைதி<br>(எல்லோருக்கும் நன்மை உண்டாகச் செய்தல்) |
| 5. போசனப்பிரியம்<br>(உண்பதற்கு, குடிப்பதற்கு இருக்கும் அளவற்ற விருப்பு) | 5. மிதமாயிருத்தல்<br>(அளவற்ற ஆசைகளிலிருந்து விலகுதல்) |
| 6. பொறாமை<br>(மற்றவர்களின் நன்மையைக் குறித்து எரிச்சலடைதல்) | 6. அன்பு<br>(மற்றவர்களின் வெற்றியில் சந்தோஷப்படுதல்) |
| 7. சோம்பல்<br>(செய்ய வேண்டியதை செய்ய விருப்பமில்லாதிருத்தல்) | 7. சுறுசுறுப்பு (உற்சாகம்)<br>(செய்ய இருப்பதை புத்துணர்வோடு செய்தல்) |

விண்ணை நோக்கிக் கூக்குரலிடும் பாவங்கள் நான்கு உள்ளன.

1. கொலை செய்தல்
2. ஏழைகளை துன்புறுத்தல்
3. பணியாளர்களின் ஊதியத்தை வஞ்சித்தல்
4. முறைகேடான பாலுறவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய ஆவியானவருக்கு எதிரான 6 பாவங்கள்

1. ஒருவர் தனது மீட்பை பற்றிய நம்பிக்கையை இழத்தல்.
2. பாவப் பொறுத்தல், நற்செயல், புண்ணியங்களின்றி மீட்பை எதிர்பார்த்தல்.
3. திருமறையின் உண்மைகளை மறுதலித்தல்.
4. ஏனையோர் பெறும் ஆன்மீக நலன்களையிட்டு பொறாமையடைதல்.
5. பாவத்தில் நிலைத்திருத்தல்.
6. மனந்திருந்தாமல் பாவ வாழ்வில் நிலைத்திருத்தல்.

(பெரிய குறிப்பிடம் 227)

## இறையருள்

ஆண்டவர் இயேசுவின் பலாபலன்களால் தூய்மையையும், ஆன்ம மீட்பையும் பெற்றுக் கொள்ள நமக்குக் கிடைக்கும் இறைவரமே இறையருள் எனப்படும்.

(பெரிய குறிப்பிடம் 126)

இறையருளைப் பெற்றுக் கொள்வதால்

1. கிறிஸ்தவரின் வாழ்க்கை புதிய பாதையில் செல்கிறது.
2. அவன் பரிசுத்த வாழ்க்கையில் இணைகிறான்.
3. பாவ வாழ்விலிருந்து மீட்கப்படவும், தன்னடக்கமாக வாழவும் உதவி கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையருள்

**தூய்மையாக்கும் அருள்**

1. நமது ஆன்மாவை தூய்மையாக்குகிறது.
2. இறைவனின் பிள்ளைகளாக்குகிறது.
3. விண்ணக உரிமையாளர் ஆவதற்கு எங்களுக்கு வரம் அளிக்கின்றது. (பெரிய குறிப்பிடம் 128)

**மெய் அருள்**

1. பாவத்திலிருந்து விலகியிருக்கவும்.
2. நற்செயல் புரிவதற்கும் எமக்குக் கொடுக்கப்படும் வரம்.

(பெரிய குறிப்பிடம் 129)

இறையருளைப் பெற வேண்டுமென்றால் நாம் தூய்மையான வாழ்வு வாழ வேண்டும். தூய்மையான வாழ்வு என்பது பாவத்தை விலக்கி வாழ்தலாகும். இதற்காக கீழ்வரும் செயல்களைச் செய்ய வேண்டும்.

1. செபம்
2. நற்செயல்
3. அருளடையாளங்களைப் பெறல்

தூய வாழ்வு வாழ்ந்து இறையருளில் வாழ முயற்சி எடுப்போம். இதற்காக இடைவிடாது முயற்சி செய்வோம். நேரிய வாழ்வு வாழ தூய ஆவியின் வரம் வேண்டி செபிப்போம். அடுத்தவரையும் தூய வாழ்வுக்கு வழிநடத்துவோம்.

### செயற்பாடு

1. தலையாய பாவங்களை வெல்லுவதற்காக நீர் செய்யக் கூடிய செயல்களை எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பிவா நான் உனக்கு மீட்பளித்து விட்டேன். (எசாயா 44 : 22) என்ற இறைவாக்கை வாழ்வாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனந்திரும்பி நான் வரும்வரை

## காணாமற்போன மகன் உவமை



12.1 படம் காணாமற்போன மகனைத் தந்தை அணைத்து முத்தமிடல்

திருவிவிலியத்தில் லூக் 15 : 11 - 32 ஐ வாசியுங்கள்

தன் தந்தையிடமிருந்து கிடைக்கப்பெறும் அன்பிற்கு முரணாக இன்பம், சுகபோகத்தை தேடிய இளையமகன் தனக்குரிய சொத்தின் பங்கை தந்தையிடமிருந்து கேட்டுப்பெற்றுச் சென்றாலும் அவையனைத்தும் சிறிது காலத்தில் முடிவடைந்து விட்டன. அவன் தேடிய நண்பர்கள், இன்பம், சுகபோகம் எல்லாவற்றையும் இழந்துவிட்டான். உண்ணக் கூட உணவு இல்லாமல் பாவத்தின் பிரதிபலனை அனுபவித்தான். இந்நிலையில் தான் தனது தந்தையின் அன்பும், இரக்கமும் அவனுக்கு நினைவுக்கு வருகின்றது. தந்தையிடமிருக்கின்ற வேலையாட்கள் பெறுகின்ற இன்பத்தையும், சந்தோஷத்தையும் நினைவிற் கொண்டு தன் மனதை மாற்றிக் கொண்டான்.

இளவரசனைப் போல் வாழ்ந்து தந்தையிடமிருந்து பிரிந்துபோன மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக் காரனைப் போல மீண்டும் தந்தையைத் தேடி வருகின்றான். அவன் மனம் மாறி வரும்வரை பார்த்துக் கொண்டிருந்த தந்தை அளவு கடந்த இரக்கத்தோடு அவனை ஏற்றுக் கொண்டார். மன்னிப்புக் கொடுத்து அவனுக்கு சிறந்த ஆடை, மோதிரம் மற்றும் பாதணிகளை அணிவித்து மீண்டும் இளவரசனின் நிலைக்கு உயர்த்தினார்.

**காணமல் போன திராக்மா உவமை**

''பெண் ஒருவரிடம் இருந்த பத்துச் திராக்மாக்களுள் ஒன்று காணாமற் போய்விட்டால் அவர் எண்ணெய் விளக்கை ஏற்றி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்வரை கவனமாகத் தேடுவதில்லையா? கண்டுபிடித்ததும், அவர் தோழியரையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணாமற் போன திராக்மாவைக் கண்டு பிடித்துவிட்டேன்' என்பார். அவ்வாறே மனம்மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்கு சொல்கின்றேன்.''

(லூக் 15 : 8 - 10)

ஒரு பெண்ணிடம் பத்து நாணயங்கள் இருந்த போதிலும் அதில் ஒன்று காணாமல் போனதால் அதை ஆர்வத்தோடு தேடிக் கண்டடைந்ததும் அம்மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதை இவ்வுவமை எடுத்துக்காட்டுகிறது.

அதைபோல எம்மைக் கைவிடவிரும்பாத இறைவன் பாவ வழியைக் கைவிட்டு மனம்மாறி இறைவல்லமையில் வாழ எம்மை அழைத்து நிற்கின்றார். மனம் வருந்தி மனம் மாறுகின்றவர்களைப் பற்றி இறைவன் அடைகின்ற மகிழ்ச்சியை எமக்கு விளக்கி நிற்கின்றது. எனவே நாம் மாற்றம் பெற்று ஏனையவர்களையும் நல்வழிக்கு கொண்டு செல்வோம்.

**பாவ வழியில் விழுந்து இறையன்பிலிருந்து தூரச் சென்று துன்பப்பட விரும்பாத எம்மைத் தேடி வருகின்ற அன்பான தந்தை எமக்கிருப்பதை உணர்ந்து கொள்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவிப் பெண்



12.2 பாவிப்பெண்ணுக்கு இயேசு மன்னிப்புக் கொடுத்தல்

தூய யோவான் நற்செய்தி 8 : 1 - 11 வசனங்களை நன்கு வாசியுங்கள் அதில் பாவிப் பெண்ணின் கதை உள்ளது.

மோசேயின் சட்டப்படி விபசாரத்தில் பிடிபட்டவர்களை கல்லால் எறிந்துகொல்வது வழக்கமாகும். ஆனாலும் இயேசு பாவிப் பெண்ணை நோக்கி இனிமேல் பாவம் செய்யாதே எனக்கூறி மன்னிப்புக் கொடுத்தார்.

நாமும் இதுவரை எம்மால் இழைக்கப்பட்ட தவறுகளை உணர்ந்து அவற்றுக்காக மனம்வருந்தி மீண்டும் பாவம் செய்யாமல் இருக்க உறுதி கொண்டு ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று இயேசுவின் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12.3 தூயம் அகுஸ்தின்

தூய அகுஸ்தின் கி.பி 354 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம்13 ம் திகதி வட ஆபிரிக்காவில் தாகாஸ்தே நகரில் (இன்று அல்ஜீரியா) பிறந்தார். இவரின் தந்தை பற்றிசியஸ் பிறசமயத்தை சேர்ந்தவர். தாய் மொனிக்காள் கிறிஸ்தவர். அவர் ஒரு புனிதை அவரை புனித மொனிக்கம்மாள் என்று அழைப்பர். அகுஸ்தினார் திறமையான பேச்சாளர், மறைவல்லுனர், தீய பழக்க வழக்கங்களால் பிழையான வழியில் சென்றார்.

அவரின் தாயாரின் உறுதியான நம்பிக்கையால் அவர் மனம்மாற வேண்டி இறைவனிடம் மன்றாடினார். தூய அகுஸ்தீனார் அம்புறோசியாரின் உதவியை நாடினார்.

* தாயாரின் வல்லமையான செபத்தினால்
* தூய அம்புறோசியாரின் வழிகாட்டலால்

அவர் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. தாயின் அளவற்ற மகிழ்ச்சி, இறை புகழ்ச்சியின் மத்தியில் அவரது 33 வது வயதில் பாஸ்கா ஞாயிறு தினத்தன்று திருமுழுக்குப் பெற்றார். அத்தருணத்தில் அவரது தாயார் இவ்வாறு கூறினார்.

அன்பான மகனே எனது வாழ்வில் இருந்த ஒரே ஆசை உன்னைக் கிறிஸ்தவனாகக் காண்பதே. நான் விரும்பியதைப் பார்க்கிலும் அதிகமாக இறைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தந்துவிட்டார். இறைவனுக்கு புகழ்ச்சி உண்டாகட்டும்.

தீமை எம்மை எப்போதும் தவறான வழியில் நடத்திச் செல்ல வழிதேடிக் கொண்டிருக்கும். இன்றைய சமூகத்தில் எம்மைப் பாவத்தில் இழுத்துப்போடும் சோதனைகள் அவற்றுக்குள் காணப்படுகின்றன. புதிய தொழில் நுட்பத்தினூடாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் விடுபட்டு ஏனையவர்களையும் விடுவிக்க செயற்பட வேண்டும். அதற்காக தூய ஆவியின் வரங்களை வேண்டி நிற்பதோடு தூய மொனிக்கம்மாளை முன்மாதிரியாக கொண்டு செயற்படுவோம்.

## செயற்பாடு

1. அப்பா நான் தவறு செய்தேன் என்ற பாடலை எழுதி வகுப்பில் பாடுங்கள்.

2. பாவிகள் மன்னிப்புப் பெறுவர் என்பதை உறுதிப்படுத்த திருவிவிலியத்தில் உள்ள இரண்டு உவமைகளை எழுதுக.

3. **மனம் மாறுதல் வழியாக இறை உறவை மீண்டும் கட்டியெழுப்புவோம்** என்ற தலைப்பில் கவிதை ஒன்று எழுதுங்கள்.

## வாழ்க்கைக்கு

**மனனம் செய்யவோம்**

தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெயரியவில்லை.

(லூக் 33. 34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஒப்புரவு அருளடையாளம்



13.1 படம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறல்

"அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித்திரிகிறது. அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்த்து நில்லுங்கள். உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதர சகோதரிகள் உங்களை போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லா அருளும் நிறைந்த கடவுள், இயேசு கிறிஸ்த்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கின்றார். சிறிது காலத் துன்பங்களுக்குப்பின் அவர் உங்களைச் சீர்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலைநிறுத்துவார். அவரது வல்லமை என்றென்றைக்கும் உள்ளது ஆமென்."

(1பேதுரு 5 : 8 - 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருவிவிலியப் பகுதி எமது எதிரி அலகை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதன் வழியாக துன்பங்கள் வருவதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. அந்த எதிரியைத் தோற்கடிக்க உறுதியான நம்பிக்கை வேண்டுமென்பதை தெளிவுபடுத்துகின்றது.

பலவீனமான மனிதன் பாவ நாட்டத்திற்கு உட்பட்டு பாவத்தைக் கட்டிக் கொள்கிறான். இதனால் விசுவாசம் தளர்ச்சியடைகின்றது. நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டுமென்றால் பாவத்தில் இருந்து விடுபட வேண்டும். அதற்காக ''ஒப்புரவு'' அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் பாவச்சோதனைக்கு அகப்பட்டு ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால் இறையருளை இழந்து விடுவதோடு விண்ணரசில் நுழையும் தகுதியையும் இழந்து விடுவோம்.

பாவத்திற்கு இரு வகையான தண்டனைகள் கிடைக்கும்.

1. நித்திய தண்டனை
2. அநித்திய தண்டனை

பாவத்திற்கு தண்டனை கிடைக்கும் இரு வகைகள் பற்றியும் இறை இரக்கத்தின் வழியாக பாவிக்கு அந்தத் தண்டனையில் இருந்து விடுபடும் முறைபற்றியும் கீழே குறிப்பிடப்படுகின்றது.

''சாவான பாவம் எம்மை இறைவனோடு வாழும் பேறிலிருந்து விலக்கி நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ளாமிலிருக்க தடை செய்கிறது. நிலை வாழ்வை இழந்து விடுவது நித்திய தண்டனை எனக் கூறப்படுகின்றது. இன்னொரு விதத்தில் எல்லாப் பாவமும், அற்ப பாவமும் கூட படைப்பு மட்டில் எம்மை படைப்புக்களோடு அளவுக்கு மீறிய பற்றுதலை ஏற்படுத்துவதால் இவ்வுலகத்திலோ அல்லது உத்தரிப்பு ஸ்தலத்திலோ தூய்மைப்படுத்தப்பட வேண்டும். இதனூடாக தற்காலிக தண்டனையிலிருந்து விடுபட முடியும். மேலே குறிப்பிட்ட இருவித தண்டனைகளும் இறைவனால் எமக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள் அல்ல. மாறாக பாவத்தினால் ஏற்படுவதாகும். இறை இரக்கத்தை நம்பி உண்மையான இறை அன்பினால் ஏற்படுகின்ற மனமாற்றத்தினால் ஒரு பாவி எவ்வித தண்டனையில் இருந்தும் முழுமையாக சுத்திகரிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்'' (க.தி.ம 1472)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலந்தாழ்த்துவதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், அவர் அவ்வாறு காலந்தாழ்த்துவதில்லை. மாறாக, உங்களுக்காகப் பொறுமையோடிருக்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம் மாறவேண்டுமென விரும்புகிறார்.

(2 பேதுரு 3 : 9)

நாம் இளைத்த தவறுகளுக்கு மன்னிப்புக்கேட்கக் கால தாமதமாக்குவது தகுதியற்றதாகும். மனம்மாற்றம் பெற்று பாவத்திலிருந்து விடுபட்டு வாழவேண்டும். அப்போது அனைவருக்கும் விண்ணுலகிற்கு பிரவேசிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட இறைவார்த்தை பகுதியில் பாவ வாழ்வில் இருந்து மனம்மாற்றம் பெற இயேசு வாய்ப்பையும் காலத்தையும் வழங்குவதாக எடுத்துக்காட்டுகின்றது.

**நித்திய தண்டனையில் இருந்து விடுதலை பெற செய்ய வேண்டியது**

நித்திய தண்டணையில் இருந்து விடுபட ஒரே வழி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதாகும். இதைப் பற்றிய கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினையை நோக்குவோம்.

"பாவ மன்னிப்பு பெற்று மீண்டும் இறைவனோடு ஒப்புரவாகுவதால் நித்திய தண்டணையில் இருந்து விடுவிக்கப்படுகின்றார். ஆயினும் அவன் பாவத்தின் அநித்திய தண்டனையோடு பிணைக்கப்பட்டுள்ளான். தனக்கு ஏற்படுகின்ற துன்பதுயரங்கள் மற்றும் அனைத்து விதமான பாவ சோதனைகளை பொறுத்துக் கொள்வதனால் மற்றும் மரண தறுவாயில் கனிவான இதயத்தோடு அதற்கு முகம் கொடுப்பதன் வழியாக கிறிஸ்தவன் இந்தப் பாவத்தின் தற்காலிக தண்டணை ஒரு வரப்பிரசாதம் என ஏற்றுக் கொள்ள வேண்டும். செபம் மற்றும் பலவிதமான ஒறுத்தல்கள் போன்ற உடல்சார்ந்த இரக்கச் செயல்கள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த இரக்கச் செல்கள் வழியாக தன்னுள் இருக்கிற "பழைய மனிதனை" முற்று முழுதாக அகற்றி புதிய மனிதனாக மாற முயற்சி செய்ய வேண்டும்"

(க.தி.ம 1473)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புரவு அருளடையாளம் வழியாக விண்ணகத்தில் பிரவேசிக்க முடியும். அது நித்திய தண்டனையில் இருந்து விடுதலையாவதாகும்.

ஒப்புரவு என்னும் அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டு நித்திய தண்டணையில் இருந்து விடுபட்டு விண்ணரசை உரிமையாக்கி கொண்டாலும் எமது பாவங்களுக்கு தண்டணை அனுபவிக்க வேண்டும். அத்தண்டணை அநித்திய தண்டணை எனப்படும்.

கடினமான பாவம் செய்தால் ஒப்புரவு பெற வேண்டும் அதைப்பற்றி பெரிய குறிப்பிடம் இவ்வாறு கூறுகின்றது.

சாவான பாவமொன்றில் நாம் வீழ்ந்துவிட்டோம். என்றால் உடனேயே இறைவனிடம் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கூடிய விரைவில் நாம் பாவ சங்கீர்த்தனம் செய்ய வேண்டும். சாவான பாவமொன்னறில் விழாதிருந்தாலும் கூட அவ்வப்போது நாம் கட்டிக் கொள்ளும் அற்ப பாவங்களை அறிக்கையிடுவது போற்றுதற்குரிய ஒரு செயலாகும். அதனால் பாவப்பொறுத்தல் மாத்திரமின்றி பாவத்திலிருந்து விலகி இருக்கும் பலன் நமக்குக் கிடைக்கின்றது.

*(பெரிய குறிப்பிடம் 234)*

**ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக பாவமன்னிப்புப் பெற வேண்டுமென்றால்**

1. ஒப்புரவு அருளடையாளத்தை நல்ல முறையில் பெற அருள் வேண்டி மன்றாடுவோம்.

2. பத்துக் கட்டளைகளையும், திருச்சபை கட்டளைகளையும் ஒவ்வொன்றாக எடுத்து கடைசியாக ஒப்புரவு அருளடையாளத்தை மேற்கொண்ட நாளில் இருந்து அதை கடைப்பிடித்துள்ளீரா என ஆன்ம சோதனையில் ஈடுபடவும்.

3. இறை அன்பை மீறிய செயல்களுக்காக உண்மையாக மனம் வருந்தி அவற்றை விட்டுவிடல்.

4. மீண்டும் ஒருபோதும் அதைச் செய்யாமலிருக்க தீர்மானம் எடுத்தல்.

5. செய்த பாவம் ஒன்றைக்கூட மறைக்காமல் குருவானவரிடம் கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. குருவானவர் கொடுக்கும் தண்டனையை நிறைவேற்றல்.

**ஒப்புரவு அருளடையாளச் சடங்கு**

- சிலுவை அடையாளம் வரைதல்.
- ''தந்தையே பாவியான என்னை ஆசிர்வதியும்'' என்று கூறல்.
- கடைசியாக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்ற திகதியை குருவிடம் கூறல்.
- இறுதியாக ஒப்புரவு அருளடையாளம் பெற்ற நாளில் இருந்து செய்த பாவங்களை இப்போது தெளிவாக கணக்கிட்டு விபரமாகக் கூறவும்.
- பாவங்களைக் கூறிய பின் ''தந்தையே ஞாபகத்திலுள்ள பாவங்கள் இவைகளே, இவைகளுக்கும் மறந்து போன பாவங்களுக்கும் மன்னிப்பும் தண்டனையும் தந்தருளும்'' என்று கூறவும்.
- குருவானவருக்கு நிதானமாக செவிமடுக்கவும். அவர் வழங்கும் அறிவுரைகளையும் அவர் உங்களுக்குக் கொடுக்கிற தண்டனைகளையும் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளவும்.
- குருவானவர் இறைவனுடைய நாமத்தினால் மன்னிப்புக் கொடுக்கும்போது பக்தியோடு ''உத்தம மனஸ்தாப...'' செபத்தைச் சொல்லவும் (என் ஆண்டவரே)
- சிலுவை அடையாளம் இடவும்.

குருவானவர் கொடுக்கும் தண்டனையை விரைவாக நிறைவேற்ற மறந்துவிட வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றவர் மட்டில் உமக்கிருக்கும் கடமை

ஒப்புரவு அருளடையாளத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டு இவ்வருளடையாளம் தேவைப்படும் போதெல்லாம் பெற்றுக் கொள்ளும் நாம் ஏனையவர்களையும் இதற்காக ஊக்குவிக்க வேண்டும். பாவத்தினால் இறையன்பிலிருந்து விலகிப் போனதால் ஏற்பட்ட அழிவை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக் கொள்ளும் முறையை மறந்திருந்தால் அதை அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்த அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பைத் தேடிச் செல்ல வழிகாட்ட வேண்டும். அதுபோலவே அநித்திய தண்டணை மற்றும் நித்திய தண்டணையில் இருந்து விடுபட்டு அருள்வாழ்வைப் பெற்றுக்கொள்ள அவர்களை ஊக்குவிப்போம்.

### செயற்பாடு

1. நித்திய தண்டணை, அநித்திய தண்டணை என்பவற்றை விளக்குக.

### வாழ்க்கைக்கு

சாவான பாவம் இல்லை என்றாலும் அடிக்கடி சிறு பாவங்களுக்காகவும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறவும். ஏனையவர்களையும் அதற்காக ஊக்குவிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 நோயில் பூசுதல் அருளடையாளம்



14.1 படம் - நோயில் பூசுதல் அருளடையாளத்தை வழங்குதல்

உன்னத மருத்துவர் இயேசு நோயாளரைக் குணமாக்குதல் மட்டுமன்று பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தையும் கொண்டிருந்தார். அவர் அந்த அதிகாரத்தை அவருடைய திருத்தூதர்களுக்கும் வழங்கினார். நலம் குன்றியோரைக் குணப்படுத்துங்கள் (மத். 10 : 8) பிற்காலத்தில் அந்த அதிகாரத்தை திருத்தூதர்கள் பயன்படுத்திய விதத்தை கீழே தரப்பட்ட இறைவார்த்தை சுட்டிக் காட்டுகிறது.

உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார்.

(யாக்கோபு 5 : 14 -15)



இலவசப் பாடநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தூதர்களின் படிப்பினைக்கேற்ப நோயில் பூசுதல் குருக்களால் வழங்கப்படுகின்றது.

**நோயில் பூசுதல் பற்றி பெரிய குறிப்பிடம் பின்வறுமாறு கூறுகின்றது.**

ஒருவர் பாரிய நோயுற்றிருக்கையில் அவருக்கு ஆன்மீக சக்தியும் உள அமைதியும், உடல் நலமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக வழங்கப்படும் அடையாளத்தை நோயில் பூசுதல் என அழைக்கின்றோம்.

இதனை 'அவஸ்த்தைப் பூசுதல்' என ஒரு காலத்தில் அழைத்தோம். இவ்வாறு அழைக்கப்பட்டமைக்கான முக்கியமான காரணம் அது ஒருவருடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் பெறப்படும் பூசுதல் என்பதனாலேயாகும்.

எனினும் மரணம் நெருங்கின வேளையில் தான் இவ்வருட்சாதனம் பெறப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. நோயாளார் குணமடைவதற்கு இவ்வருட்சாதனம் காரணமாயிருந்திருக்கின்றது.

(பெரிய குறிப்பிடம் 261)

**நோயில் பூசுதல் அருளடையாளத்தை பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள்**

- வயோதிபர் அல்லது நோயளிகள் அல்லது மரணத்தருவாயில் இருப்பவர்கள்.
- தீவிர சத்திர சிகிச்சைக்கு ஆயத்தம் செய்யப்படுபவர்கள்.
- மரண தறுவாயில் இல்லாவிட்டாலும் சிறிது காலத்தில் மரணமடையக் கூடியவர்கள்.

இறைமக்கள் எவரும் இறக்கும் வேளையில் இருக்கும்போதும் தங்கள் நோய் அதிகமானாலும் அல்லது மற்றொரு கடினநோயினால் அல்லலுற்றாலும் இவ்வருளடையாளத்தைப் பலமுறை பெறலாம்.

(கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 1529)

நோயில் பூசுதல் அருளடையாளத்தை மீண்டும் மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதால் கிடைக்கும் வரங்கள்

நோயில் பூசுதல் அருளடையாளத்தின் பலனாக கிடைக்கப் பெறும் விசேட வரங்கள் பற்றிக் கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 1532 பின்வறுமாறு கூறுகின்றது.

- தனிப்பட்ட விதத்தில் தனக்கும் முழுத்திருச்சபையின் நன்மைக்காகவும் நோயாளியை இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளோடு ஒன்றிணைக்கின்றது.

- நோய் அல்லது வயோதிபத்தால் ஏற்படும் துன்பங்களை கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் தாங்கிக்கொள்ள தேவையான ஆறுதலையும், அமைதியையும், துணிவையும் வழங்குகின்றது.

- ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற இயலா நிலையிலிருந்தாலும் நோயாளிக்கு பாவ மன்னிப்பு கிடைக்கின்றது.

- மரணத்தறுவாயில் இருக்கும் ஒருவர் மீண்டும் உடல்நலம் பெற அல்லது நிலைவாழ்வைப் பெறும் பயணத்திற்கு துணை புரிகின்றது.

நோயாளி ஒருவர் நோயில் பூசுதல் அருளடையாளம் வழியாக இவ்வரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக குருவானவரை அழைத்துவர வேண்டும். குருவானவர் வருவதற்கு முன் இடத்தையும் நோயாளியையும் ஆயத்தம் செய்வது எமது கடமையாகும்.

### இடத்தையும் நோயளியையும் ஆயத்தம் செய்ய வேண்டிய முறை

- ✦ மேசையின் மீது வெள்ளைத் துணியை விரித்து அதன்மீது சிலுவையையும் விளக்கையும் வைத்தல்.

- ✦ ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், கை துடைக்கும் துணி ஒன்றையும் வைத்தல்.

- ✦ கூடியளவில் நோயாளியையும் இடத்தையும் தூய்மையாக வைத்திருக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயில் பூசுதல் மரணத்தறுவாயில் இருப்பவர்களுக்கு மட்டும் அல்ல. நோயுற்றிருப்பவரும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை விளங்கிக் கொண்டு நோயாளியை உடல், உளரீதியாக ஆயத்தம் செய்ய வேண்டும். இந்த நோயில் பூசுதல் பற்றி நோயாளியினுள் பயமொன்று ஏற்படலாம். அதனால் அப்பயத்தை நீக்கிவிட வேண்டும்.

நோயில் பூசுதலை வழங்க நோயாளி இறக்கும் தறுவாயை அடையும் வரை காத்திருத்தல் பொருத்தமற்றது.

சிரமம் பாராது நாம் நோயாளிக்குப் பணிவிடை செய்ய வேண்டும். நோயில் பூசுதல் வழியாக வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெறும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். எனவே நாம் அவர்கள் அவ் அருளடையாளத்தைப் பெற ஊக்குவிக்க வேண்டும். இறைபிள்ளைகளாகிய நாம் ஒருவர் இறக்க முன் ஒன்றினைந்து இறுதிப்பயணத்திற்கு உதவி செய்ய வேண்டும். நோயில் பூசுதலை பெற நோயளிகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வோம். குருக்களுக்கு அவர்களைப்பற்றி அறிவிப்போம்.

**செயற்பாடு**

1. நோயில் பூசுதல் வழியாக கிடைக்கும் வரங்கள் மூன்று எழுதுக.
2. நோயாளியின்பால் எமக்குள்ள கடமைகளை எழுதுக.
3. நோயாளிகளைத் தரிசிக்கும் போது சொல்லக்கூடிய செபம் ஒன்று எழுதுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

நோயில் பூசுதலைப் பெற நோயாளிகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்வோம்.



இலவசப் பாடநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நோயில் பூசுதல் சடங்கு முறை



15.1. படம் - நோயில் பூசுதல் வழங்குதல்

நோயில் பூசுதல் அருளடையாளத்தை வழங்குவதற்கு முன் குருவானவர் நோயாளருக்கு ஒப்புரவு அருளடையாளத்தை வழங்குவார்.

**தொடக்கம்**

குருவானவர் வெண்ணிற ஆடையை அணிந்து ''ஆண்டவருடைய சமாதானம் உங்களோடும் இருப்பதாக'' என்று கூறி நோயாளிக்கும் வீட்டாருக்கும் வாழ்த்துக் கூறுவார். நோயாளி மீதும் அறையிலும் தீர்த்தம் தெளித்துக் கொண்டே இத்தீர்த்தம் நாம் பெற்ற திருமுழுக்கை நினைவூட்டுவதாக, தம் பாடுகளாலும் உயிர்ப்பினாலும் நம்மை மீட்ட கிறிஸ்துவையும் நமக்கு நினைவுபடுத்துவதாக என்று கூறி குருவானவர் கீழே தரப்பட்டுள்ள வார்த்தைகளாலோ அல்லது அதற்குப் பொருத்தமான வார்த்தைகளாலோ அறிவுறுத்துவார்.

**குரு** : அன்புள்ள சகோதரர்களே, நோயுற்றோர் உடல் நலம் தேடி ஆண்டவரிடம் வந்தார்கள் என்று நற்செய்தி கூறுகின்றது. நமக்காக பாடுபட்ட எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான், இயேசு கிறிஸ்து இதோ தம் பெயரால் கூடியிருக்கும் நம் மத்தியில் எழுந்தருளியிருக்கிறார். ''உங்களுள் யாரேனும் துன்புற்றால் இறை வேண்டல் செய்யட்டும்; மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும். உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர் மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார்'' என்று திருத்தூதரான யாக்கோபு வழியாக நமக்கு கட்டளை தருபவரும் அந்த ஆண்டவரே.

எனவே நோயுற்றிருக்கும் நம் சகோதரர் மீது கிறிஸ்து பெருமானின் அருளும், வல்லமையும் இறங்கி, இவரது வேதனையைத் தணித்து, உடல் நலம் அருளுமாறு உருக்கமாக மன்றாடுவோம்.

**மன்னிப்பு வழிபாடு**

**குரு** : சகோதரரே, இத்திருச்சடங்கில் நாம் தகுதியுடன் பங்கு பெற நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு மனம் வருந்துவோம்.

*(சிறிது நேரம் மௌனம்)*

**எல்** : எல்லாம் வல்ல இறைவனிடமும், சகோதரரே உங்களிடமும் நான் பாவியென்று ஏற்றுக் கொள்கிறேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும், செயலாலும் கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே. ஆகையால் எப்போதும் கன்னியான தூய மரியாவையும், வானதூதர் புனிதர் அனைவரையும் சகோதரரே உங்களையும் நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக் கொள்ள மன்றாடுகின்றேன்.

**குரு** : எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக...

**எல்** : ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவாக்கு வாசகம்**

மத்தேயு 8 : 5 - 10, 13 வசனங்களை வாசிப்பர்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**குரு** : சகோதரரே, நம் சகோதரருக்காக (அல்லது சகோதரிக்காக) இறைவனைத் தாழ்ந்து பணிந்து நம்பிக்கையோடு வேண்டுவோம்.

**குரு** : ஆண்டவரே, இத்திருப்பூசுதல் வழியாகத் தேவரீர் பரிவன்புடன் இவரைச் சந்தித்து தேற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்** : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

**குரு** : தீமை அனைத்திலிருந்து இவரை விடுவிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்** : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

**குரு** : இங்குள்ள நோயாளிகள் அனைவருடைய வேதனைகளையும் தேவரீர் தணித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்** : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**குரு** : நோயாளிகளை பராமரிக்கும் அனைவருக்கும் தேவரீர் துணைநிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்** : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**குரு** : இவரைப் பாவத்திலிருந்தும், சோதனை அனைத்தில் இருந்தும் விடுவிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்** : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : உமது பெயரால் நாம் இவர் தலைமீது கைகளை வைப்பதால், இவருக்கு நல்வாழ்வும் உடல் நலமும் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

(குரு மௌனமாக நோயாளியின் தலைமீது கைகளை வைக்கின்றார்.)

## திரு எண்ணெய் மீது நன்றி மன்றாட்டு

குரு : எங்களுக்காகவும், எங்கள் மீட்புக்காகவும் உம் திருமகனை உலகிற்கு அனுப்பிய எல்லாம் வல்ல தந்தையாம் இறைவா, போற்றி.

எல் : இறைவா போற்றி, போற்றி.

குரு : எங்கள் மனித நிலைக்குத் தாழ்ந்து வந்து, எங்கள் பிணிகளைப் போக்கத் திருவுளமான ஒரே திருமகனாம் இறைவா, போற்றி.

எல் : இறைவா போற்றி, போற்றி.

குரு : உமது நிலையான வல்லமையால் எங்கள் உடலின் சோர்வினைப் போக்கித் திடப்படுத்தி எங்களுக்குத் துணை நிற்கும் தூய ஆவியாம் இறைவா போற்றி.

எல் : இறைவா போற்றி, போற்றி.

குரு : அன்புத் தந்தையே, உம் அடியார் இவர் மீது திரு எண்ணெய் பூசுகின்றோம். இதனால் இவர் வேதனை தணிந்து, ஆறுதல் பெற வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## திரு எண்ணெய் பூசுதல்

(நோயாளியின் நெற்றியிலும், கைகளிலும் திரு எண்ணெய் பூசி ஒரே முறை கூறுவதாவது)

குரு : இப்புனித பூசுதலினாலும், தம் அன்பு மிகுந்த இரக்கத்தாலும், ஆண்டவர் தூய ஆவியாரின் அருளைப் பொழிந்து, உமக்கு துணைபுரிவாராக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல் : ஆமென்.

குரு : இவ்வாறு, உம் பாவங்களைப் போக்கி, உமக்கு நலமளித்து தயவாய் உம்மைத் தோற்றுவாராக.

எல் : ஆமென்.

**குருவின் செபம்**

குரு : செபிப்போமாக இரக்கமுள்ள எங்கள் மீட்பரே, தூய ஆவியாரின் அருளால், இந்த நோயாளியின் சோர்வையும், பிணிகளையும் தணித்து இவருடைய புண்களை ஆற்றி பாவங்களை போக்கி, உள்ளத்திலும், உடலிலும் இவர் படும் வேதனைகளை அகற்றி, உள்ளும் புறமும் இவர் முழுமையாக நலம் பெற தயைபுரியும், இவ்வாறு இவர் உமது பரிவன்பினால் நலமடைந்து, பழைய நிலைபெற்று தம் கடமைகளை தொடர்ந்து நிறைவேற்றுவாராக என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே, உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

**நற்கருணை வழங்குதல்**

பரலோக மந்திர செபத்தின் பின் குருவானவர் நற்கருணையை உயர்த்தி ''இதோ இறைவனின் செம்மறி இவரே உலகின் பாவங்களை போக்குபவர். இவருடைய திரு விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்'' என்று கூறும் போது அதற்கு பொருத்தமான பதிலை அனைவரும் கூறுவார்கள். பின்னர் நோயாளிக்கு நற்கருணை வழங்கப்படும். நற்கருணை பெற விரும்புவோரும் நற்கருணை பெறலாம்.

பின்னர் குருவானவர் கீழே தரப்பட்ட செபத்தைக் கூறுவார்.

குரு : செபிப்போமாக, பரிசுத்த தந்தையே எல்லாம் வல்ல இறைவா எம்முடைய சகோதரன் (சகோதரி) பெற்றுக் கொண்ட உமது திருமகனும் எமது ஆண்டவருமான இயேசுக் கிறிஸ்துவின் திருவுடலை (திரு இரத்தத்தை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் (இவளின்) ஆன்மாவுக்கும் உடலிற்கும் நலமளிக்கும் அருமருந்தாக்கியருளும். நாங்கள் நம்பிக்கையோடு உம்மை நோக்கி மன்றாடுகின்றோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக எமக்கு இவை கிடைக்கப் பெறுவதாக.

எல் : ஆமென்.

**ஆசீர் வழங்குதல்**

குரு : எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவி இங்கிருக்கும் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

எல் : ஆமென்.

கிறிஸ்துவிடமிருந்து எமக்கு கிடைக்கப்பெறுகின்ற மேற்கூறிய வரப்பிரசாதங்கள் கிறிஸ்தவனுக்கு மிக முக்கியமான ஒன்றென நாங்கள் நம்புகிறோம். அந்த நம்பிக்கையை ஏனையவரிடம் கொண்டு செல்வது எமது கடமையாகும். அப்படியென்றால் நோயில்பூசுதல் அருளடையாளத்தைப் பெற தேவையிலிருப்போருக்கு அதைப் பெற்றுக் கொள்ள ஆயத்தம் செய்தல். அந்த சடங்கு முறையில் மிகுந்த ஆவலோடு பங்குகொள்வதோடு ஏனையவர்களையும் அதற்காக ஊக்குவித்தல் எமது கடமையாகும்.

நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்க வருகை தரும் குருவானவருக்கு ஒத்துழைப்பு வழங்கி அவரோடு நோயாளிக்காக செபிப்பதும், நோயாளி செபத்திற்கு செவிமடுக்க உதவுவதும் எமது கடமையாகும்.

இறுதி வழி நற்கருணை பற்றி திருச்சபையின் மறைக்கல்வி பின்வருமாறு கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயில் பூசுதல் அருளடையாளத்தை வழங்கும் போது திருச்சபை இறக்கும் வேளையில் இருக்கும் ஒருவருக்கு திருப்பயண உணவாக நற்கருணையை வழங்குகின்றாள். தந்தையை நோக்கிய பயணத்தில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கும் வேளையில் இருந்து, உயிர்த்த கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாகிய நற்கருணை வழங்கப்படுகின்றது. இந்த நற்கருணை நிலைவாழ்வின் வித்தாகவும், உயிர்ப்பின் ஆற்றலாகவும் அமைகிறது. எவனொருவன் எனது உடலை உண்ணுகின்றானோ அவனுக்கு நிலைவாழ்வு கிடைக்கப்பெறும். ஏனெனில் நான் அவனை இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்.

(க.தி.ம 1524)

திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை ஆகிய மூன்று அருளடையாளங்களும் புகுமுக அருளடையாளங்கள் என்று அழைக்கப்படுவது போல, ஒப்புரவு, நோயில் பூசுதல் மற்றும் இறுதித் திருப்பயண உணவு கிறிஸ்தவ வாழ்வின் இறுதியில் "வான் வீடு செல்ல ஆயத்தம் செய்யும் அருளடையாளம் ஆகும்" இவ்வுலகத் திருப்பயணத்தை முழுமையாக்கும் அருளடையாளமாகவும் இதனைக் குறிப்பிடலாம்.

(க.தி.ம 1525)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்கும் சடங்கின் பிரிவுகளை ஒழுங்குபடுத்துங்கள்.

## வாழ்க்கைக்கு

நோயில் பூசுதல் அருளடையாளம் பெறத் தகுதியானவர்களை அறிந்து குருவானவருக்கு அறிவிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 தமது வாழ்வை பாதுகாத்தல்

"மனித வாழ்வு புனிதமானது"

"இறைவனின் சாயலாக மனிதன் படைக்கப்பட்டுள்ளான்"

"மனித வாழ்வு தூய்மையானது"

"மனித வாழ்வை மதிப்போம்"

"மனித வாழ்வை விலை கொடுத்து வாங்க முடியாது"

"அழிவுக்குரியவற்றில் இருந்து வாழ்வைப் பாதுகாப்போம்"

"எமது வாழ்வு இறைவனுக்கு சொந்தமானது"

"வாழ்வை பாதுகாப்போம்"

"எமது உடல் நலம் பற்றி விழிப்போடு இருக்க வேண்டும்"

"வாழ்வு இறைவன் எமக்கு வழங்கிய விலை மதிப்பில்லாத கொடையாகும்"

மேற்கூறிய தலைப்புகளைப் பற்றிச் சிந்தியுங்கள்.

எமது வாழ்வு இறைவன் எமக்குத் தந்த மாபெரும் கொடையாகும். எல்லா மனிதரும் இறைவனுடைய கருணையினால் பெற்றோரிடத்தில் இருந்து இவ்வுலகில் பிறந்தனர். இறைவனே எமது வாழ்வை பாதுகாத்து வழிநடத்துகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வாழ்பவர் நாளை இறந்து விடுவார். தமது சொந்த முயற்சியால் வாழ் நாளைக் கூட்ட எந்த மனிதராலும் இவ்வுலகில் இயலாது.

மனிதன் இறைவனோடு ஒன்றித்து படைப்பு செயற்பாட்டிற்கு பங்களிப்பு வழங்குவதால் மனித வாழ்வு மிகப்புனிதமானது. அவன் உலகைப் படைத்தவரோடு சிறப்பான உறவு கொண்டிருப்பதாலே தொடக்கம் முதல் முடிவு வரை மனித வாழ்வுக்கு உரிமையாளர் இறைவன் ஒருவரே ஆகவே எந்தவொரு காரணத்திற்காகவும் மனித வாழ்வை அழிக்க எவருக்கும் உரிமை இல்லை.

**(கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 2258)**

எமது வாழ்வு தூய ஆவியின் ஆலயமாகும். ஆகவே எமது வாழ்வை தூய்மைப்படுத்த எப்போதும் முயற்சி எடுக்க வேண்டும். இறைவனின் கொடையாகிய எமது வாழ்வு இறைவனுக்கு சொந்தமானதால் எப்போதும் இறைவனுக்குகந்த வாழ்வு வாழ்ந்து உடலின் ஆரோக்கியத்தைப்பற்றிக் கருத்தில் கொண்டு வாழ்வது எமது கடமையாகும்.

வாழ்வும் எமது உடலும் இறைவனிடமிருந்து கிடைக்கப்பெற்றதால் அதைக்குறித்து கவனம் செலுத்துவது எமது பொறுப்பாகும்.

மதுபோதை பாவனை மனித சுகாதாரத்திலும், வாழ்விலும் பாரிய அழிவை ஏற்படுத்தும். நோய் தடுப்பு சிகிச்சைக்காக மட்டுமே அன்றி வேறு எந்தவொரு தேவைக்காகவும் மதுவை பயன்படுத்துவது கடுமையான பாவமாகும். போதைவஸ்தை இரகசியமாக தயாரித்தல் மற்றும் அவற்றை கடத்துதல் என்பன துன்மாதிரிகையான செயல்களாகும். இவர்கள் பாவத்தோடு நேரடியாக தொடர்புபடுவதோடு ஒழுக்கவியல் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளைச் செய்ய மக்களை ஊக்குவிக்கின்றனர்.

**(கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 2291)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுபோதை பாவனை, புகைத்தல் உடலுக்கு நோயை ஏற்படுத்தும் புற்று நோயையும் உண்டாக்கும்.

இறைவன் எமக்குத் தந்த கொடையே இவ்வாழ்வு. எமது திறமைகளை மனிதர்களுக்கு பணிபுரிய பயன்படுத்துவோம்.

## தற்கொலை

கடவுளே வாழ்வை வழங்கியதால் தம் வாழ்வை பற்றி ஒவ்வொருவருக்கும் அவர் முன்னிலையில் பொறுப்புண்டு. வாழ்வின் அதிபதி எல்லாம் வல்ல இறைவன் ஒருவரே.வாழ்வை நன்றியுணர்வோடு ஏற்றுக் கொண்டு இறைவனின் மகிமைக்காகவும் எமது ஆன்ம மீட்புக்காகவும் அதை பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம். நாம் வாழ்வின் உரிமையாளர்கள் அல்ல அதன் பொறுப்பாளர்கள் மட்டுமே. வாழ்வை அழிப்பதற்கு எமக்கு எந்த உரிமையுமில்லை.

(கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 2280)

தற்கொலை செய்து கொள்வதன் வழியாக எடுத்துக்காட்டுவது என்ன வென்றால் இறைவனுக்கு சொந்தமான உயிரை தம் வசப்படுத்திக் கொள்ளும் முயற்சியாகும். அது சாவான பாவமாகும்.

வாழ்வை எமக்குத்தந்தருளிய இறைவனே! எமது உயிரும் உடலும் உம் கரங்களிலே தங்கியுள்ளதே......
காத்தருளும் என்னை இறைவனே.

வாழ்வு இறைவன் எமக்கு கொடுத்த கொடை என்பதால் நோய்வாய்ப் பட்டிருக்கும் பொழுது மருந்து எடுத்தல், உடல் நலத்தைப்பற்றி கவனம் செலுத்துதல் போன்றவை எமது கடமையாகும். ஒவ்வாத உணவுகளை உட்கொள்ளும் பழக்கம் நோய்களை ஏற்படுத்தும். அதிகமாக உப்பு, சீனி போன்ற பொதுவான உணவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகள் உட்கொள்ளுதல் அடிக்கடி எண்ணெய் மற்றும் கொழுப்பு உட்கொள்ளுவதினால் அதிக குருதி அழுத்தம் சக்கரை நோய் போன்ற நோய்கள் ஏற்பட்டு அகால மரணம் ஏற்படலாம். இறைவன் எமக்குக் கொடுத்திருக்கும் கொடையான இவ்வாழ்வை சரிவர பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்காக தேவையானவற்றை செய்து கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சியின்மை, உடலுக்குப் பொருத்தமற்ற உணவு உட்கொள்ளுவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி அவதானமாக இருக்க வேண்டும். எமது வாழ்வை ஆரோக்கியமாகப் பேணத் தேவையானவற்றை மேற்கொள்வதனால் இறைவன் எமக்களித்த கொடையாகிய வாழ்வைப் பாதுகாக்க முடியும்.

**செயற்பாடு**

1. வாழ்வு இறைவனுக்கு சொந்தமான விலைமதிக்கமுடியாத சொத்தாகும். இத்தலைப்பில் கத்தோலிக்கப் பத்திரிகை ஒன்றிற்குக் கட்டுரை ஒன்று எழுதுக.

2. நீர் உமது வாழ்வைப் பாதுகாக்கச் செய்யக்கூடிய 05 விடயங்களைத் தருக.

**வாழ்க்கைக்கு**

இறைவன் கொடுத்த விலைமதிக்கமுடியாத வாழ்வை மதிப்போம், பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 அடுத்தவரின் உயிரைப் பாதுகாத்தல்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
என் சகோதரன் - (2)

வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

(ஒவ்வொரு........)

பிற குலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் சேர்ந்தாலும் சகோதரன்
பிற மொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

(ஒவ்வொரு........)

மேற் தரப்பட்டுள்ள பாடலை அவதானமாக உணர்ந்து பாடி தியானியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அவள் அவன் சகோதரன் ஆபேலைப் பெற்றெடுத்தாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயின் நிலத்தைப் பண்படுத்துபவன் ஆனான். சில நாள்கள் சென்றன. காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டு வந்தான். ஆபேலும் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளைக் கொண்டு வந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார். ஆனால் காயினையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் அவர் கண்ணோக்கவில்லை. ஆகவே, காயின் கடுஞ்சினமுற்றான். அவன் முகம் வாடியது. ஆகவே, ஆண்டவர் காயினிடம், ''நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பதேன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன்வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆளவேண்டும்'' என்றார். காயின் தன் சகோதரன் ஆபேலிடம், ''நாம் வயல்வெளிக்குப் போவோம்'' என்றான். அவர்கள் வெளியிலிருந்த போது, காயின் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக்கொன்றான்.

(தொநூல் 4 : 2 - 8)

ஆபேல் கொடுத்த காணிக்கை இறைவனுக்கு உகந்த காணிக்கையாக இருந்தது. அது இறைவனுக்கு உகந்த காணிக்கையாக இருந்தபடியால் இறைவன் அதனை ஏற்றுக் கொண்டார். நாம் இறைவனுக்கு கொடுக்கும் காணிக்கையானது அவருக்கு உகந்ததாக இருக்க நல்லதை அவருக்கு கொடுக்க வேண்டும். உதாரணமாக எமது நேரத்தை அவருக்கு கொடுத்து ஒவ்வொரு நாளும் எழுந்தவுடன் மறக்காது இறைவேண்டல் செய்ய வேண்டும்.

காயின் இறைவனுக்கு கொடுத்த காணிக்கையை அவர் ஏற்றுக் கொள்ளாததால் காயின் ஆபேல் மீது பொறாமை உணர்வுடன் செயற்பட்டான். பொறாமையானது சிறியதொன்றாக காணப்பட்டாலும் இக்கதையில் அது உயிரை அழிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்தது. காயினால் தன் ஒரே சகோதரரான ஆபேல் கொலை செய்யப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை தலையான பாவமாகும். அது தலையான பாவமாகக் கருதப்படுவது எம்மை பாரிய பாவத்திற்கு இட்டுச்செல்வதாலேயே ஆகும். பொறாமை பழிவாங்க தூண்டியதை காயின் ஆபேல் கதையில் காணக்கூடியதாக உள்ளது.

பழிவாங்குவதால் மற்றவர்களின் வாழ்வுக்கு மதிப்பளிக்க இயலாமல் போகின்றது. எனவே பழிவாங்கும் உணர்வை எமது வாழ்வில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். பழிவாங்காமல் அனைவரையும் அன்பு செய்ய வேண்டுமென கற்பித்ததை நினைவிற் கொண்டு அவ்வாறு செயற்பட முயற்சி எடுப்போம்.

இப்பாடத்தில் தரப்பட்ட பாடலின்படி வாழ்ந்தால் மற்றவர்களின் வாழ்விற்கு மதிப்பளிக்கலாம்.

**கருக்கலைப்பு**




17.1. படம் தாயின் கருவிலிருக்கும் குழந்தை



17.2. படம் பிறந்த குழந்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களை அவதானமாகப் பார்க்கவும், உங்களின் தாயும் பத்துமாதம் கருவில் தாங்கி இவ்வுலகில் உங்களை ஈன்றெடுத்ததை நினைத்துப் பார்க்கவும். நீங்கள் தாயின் கருவில் உருவானது முதல் இன்று வரை பாதுகாத்து வருவதற்காக உங்கள் தாய்க்கும் தந்தைக்கும் நன்றி கூறவும்.

இவ்வுலகில் பிறந்த பின்னர் மட்டுமல்ல தாயின் கருவில் உருவான நாள்முதலே வாழ்வு தொடங்குகின்றது. கரு உருவான நாள் முதல் வாழ்வின் உரிமை இறைவனுக்கு உரியது என்பதை கீழே தரப்பட்ட வாசகப்பகுதி எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்"

எரேமியா 1 : 5

"என் எலும்பு உமக்கு மறைவானதன்று; மறைவான முறையில் நான் உருவானதையும் பூவுலகின் ஆழ்பகுதிகளில் நான் உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்"

திபா 139 : 15

தாயின் கருவில் இருக்கும் போதே வாழ்வின் உரிமை இறைவனுக்குரிய தாகும். இதை அழித்து விடும் உரிமை எமக்கில்லை. அது மனித மாண்புக்கு முரணான செயலாகும். காயினால் செய்யப்பட்ட பாவமே கருக்கலைப்பவராலும் செய்யப்படுகின்றது. ஆபேலை விடவும் அப்பாவியான நபரை (குழந்தை) கொலை செய்கின்றனர். ஆன்மாவை பாதுகாக்க இயலாத ஒருவரைக் கொலை செய்கின்றனர். இதைப்பற்றி கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் இவ்வாறு கூறுகின்றது.

"கருக்கலைப்பு சிறுவர் கொலையாகும்; கொடூரமான செயலாகும்"

(கதிம 2271)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை அழித்தல்

கருக்கலைப்பு செய்யக்கூடாது. எந்தவொரு மனித உயிரையும் அழிக்கக் கூடாது என்பதை தாய் திருச்சபை கற்பிக்கின்றாள்.

ஐந்தாம் கட்டளையில் தடைசெய்யப்பட்ட விடயத்தை திருவிவிலியம் தெளிவுபடுத்துகின்றது. குற்றமற்றவர் மற்றும் நீதிமானை கொலை செய்ய வேண்டாம். வேண்டுமென்றே குற்றமற்ற நபரைக் கொலைசெய்தலானது மனித மாண்பிற்கு, படைத்தவரின் உன்னத தன்மைக்கு, பொன்னான சட்டத்திற்கு, முரணான பாரிய செயலாகும். இத்தகைய சட்டமானது அனைத்துலக மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இது தனிப்பட்ட முறையிலும், ஒவ்வொருவருக்கும் எப்பொழுதும் எவ்விடயத்திலும் உரிய தொன்றாகும்.

(க.தி.ம 2261)

குற்றமற்றவர் மட்டுமன்றி குற்றவாளிகள்கூட கொலை செய்யப்படக்கூடாது என்பது பற்றி காயினுக்கு இறைவன் கூறியதை கீழ் தரப்பட்டுள்ள இறைவார்த்தை தெளிவுபடுகின்றது.

ஆண்டவர் அவனிடம் ''அப்படியன்று, காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான்'' என்று சொல்லி காயினைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்''

(தொநூ 4 : 15)

இயேசு கிறிஸ்து மலைப்பொழிவின் போது ஐந்தாய் கட்டளையை நினைவுபடுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொலை செய்யாதே; கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்'' என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கின்றேன். ''தம் சகோதரர் சகோதரர்களிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார். தம் சகோதரரையோ சகோதரியையோ 'முட்டாளே' என்பவர் தலைமைச்சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார். 'அறிவிலியே' என்பவர் எரி நரகத்துக்கு ஆளாவார்''

(மத். 5 : 21 - 22)

தனது சகோதரனோடு சமாதானமாக வாழ வேண்டுமென இயேசு கிறிஸ்து எமக்கு எடுத்துக் காட்டுகின்றார். இதனூடாக மற்றவருடைய வாழ்வைப் பாதுகாக்க கடமைப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

கோபம், வைராக்கியம், பழிவாங்குதல் போன்றவை சகோதர அன்பிற்கு முரணானவையாகும். பழிவாங்காது மறு கன்னத்தையும் காட்ட வேண்டுமென தமது சீடர்களுக்கு இயேசு கற்பிக்கின்றார்.

இறைவனின் பிள்ளைகளான எமதுவாழ்வு முறை மேலானதாக இருக்க வேண்டும். உன்னதமான தந்தையின் பிள்ளைகளாக சகோதர சகோதரிகளை அன்பு செய்ய வேண்டும். அயலவரை அன்பு செய்வது எமது விசேட குண இயல்பாக இருக்க வேண்டும். இதனூடாக ஏனையவரின் வாழ்வைப் பாதுகாக்க இயலும்.

நாம் அனைவரும் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டிருப்பதனால் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே.

**செயற்பாடு**

1. அடுத்தவரின் வாழ்வைப் பாதுகாக்கச் செய்யக் கூடிய 03 விடயங்கள் தருக.

2. கருக்கலைப்பு பாவமாகுமென்பதை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக்கு**

அனைத்து மனிதர்களும் இறைவனின் படைப்பு என்பதால் எமது வாழ்வைப் போல ஏனையவரின் வாழ்வைப் பாதுகாக்க எம்மை அர்ப்பணிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 மோகபாவம் செய்யாதிருப்பாயாக



18:1 மன்னிப்புப் பெறுதல்

இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தூயவன். மனித வாழ்வின் ஆரம்பம் ஆண் - பெண் உறவில் தங்கியிருக்கிறது. அது புனிதமானது என கிறிஸ்து கூறியிருக்கிறார். இதனால், இயேசு தமது முதற் புதுமையைக் கானா ஊர்த் திருமணத்தில் நிகழ்த்தினார்.

திருமணம் செய்து கொள்வோர் தங்கள் பெற்றோரிடமிருந்து விடைபெற்று ஒருவர் ஒருவரோடு ஒருடலாக இணைகின்றார்கள்.

திருமணம் ஓர் அருளடையாளமாகும். இதன் உன்னதமான நோக்கத்திற்காக ஆண் பெண் இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்புகொண்டு அர்ப்பணிக்கப்படுவதாக கத்தோலிக்க திருமறை கற்பிக்கின்றது. திருமணம் என்பது ஒரு விளையாட்டு அல்ல. அதனைக் காம இச்சைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒன்றாகக் கருதும் போது அது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. திருமணத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஆண் பெண் உறவுகள் திருமணத்தின் புனிதத் தன்மையை சீர்குலைக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வாழ்வின் அன்பு உன்னதமான கொடையாகும். தற்கால சமூகத்தில் அது சீர்குலைக்கப்பட்டாலும் கிறிஸ்தவர்கள் அதைப் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே திருமணத்துக்கு முன்னரோ அல்லது பின்னரோ எந்த ஒரு தகாத உறவையும் மேற்கொள்ளக் கூடாது.

எமது சொல்லாலும், செயலாலும், பார்வையாலும் நாம் தூய்மையாக இருக்க வேண்டும். தவறான நூல்களை வாசித்தல், ஆபாச படங்கள், திரைப்படங்களைப் பார்த்தல் என்பன அதற்கு இடையூறாக உள்ளன. எனவே அவற்றிலிருந்து நாம் விலகி இருக்க வேண்டும்.

ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று.

(மத். 5:28)

**ஆறாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள்**

- ஆபாச நூல்களை வாசித்தல்
- ஆபாச படங்கள், திரைப்படங்களைப் பார்த்து சுய இன்பம் காணல்
- பலதாரத் தொடர்புகளை வைத்திருத்தல்
- பாலியல் வல்லுறவு
- ஓரினச் சேர்க்கை
- சிறுவர் துஷ்பிரயோகம்
- திருமணத்துக்கு முன் உள்ள பாலியல் உறவுகள்

**தூய வாழ்வு வாழ்வதற்கு....**

- சுயகட்டுப்பாட்டுடன் வாழல்
- பொதுநல நட்புறவைப் பேணல்
- செபித்தல்
- உடலுக்கு மதிப்பளித்தல்
- தாம்பத்திய உறவுக்கு மதிப்பளித்தல்
- அருளடையாளங்கள் வழியாகக் கிடைக்கப் பெறும் வரங்களில் நிலைத் திருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் பரத்தமைக்கு அல்ல, கிறிஸ்துவுக்காகவே என்பது கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடல் பரத்தைமைக்கு அல்ல, ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர்.

(1கொரி 6:13)

## செயற்பாடு

1. 'தூய வாழ்வின் வழி எமது புனிதத்துவத்தைப் பாதுகாப்போம்' என்னும் தலைப்பில் கத்தோலிக்க சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்று எழுதுக.

2. ஆறாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் 3 ஐக் குறிப்பிட்டு அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகள் எவை என்பதை உமது நண்பருக்கு அறிவுரையாக எழுதுக.

## வாழ்க்கைக்கு

அனைவருடனும் சகோதர அன்பைப்

பேணுவோம்! மதிப்பளிப்போம்! ஊக்குவிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக

ஆன்மாவும், உடலும் சேர்ந்த படைப்பே மனிதன். எனவே உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையே எப்பொழுதும் போராட்டம் நடைபெறுகிறது. இந்தப் போராட்டமானது பாவத்தின் விளைவினால் மனிதனுக்கு கிடைத்தது. பாவத்திலிருந்து விடுபடத் தூய ஆவியின் வல்லமையும் சக்தியும் எமக்குத் தேவைப்படுகிறது.

ஒரு சிந்தனை அல்லது ஒரு எண்ணம் மனதிற்குள் தோன்றியதும் அது பாவமாகாது. விருப்பின்றி அச் சிந்தனை இருப்பினும் அது பாவமாகாது. சிந்தனையை அல்லது கற்பனையை வேண்டுமென்று செயற்படுத்த முயற்சித்தலே பாவமாகும்.

தூய ஒழுக்கம் அடக்கமுடைமையை வலியுறுத்துகிறது. அடக்கமுடைமையோ ஒருவருடைய ஆளுமையைப் பாதுகாப்பதோடு அவரது கற்பு பற்றிய அக்கறையை வெளிப்படுத்துகிறது. மனித மாண்புக்கும் அன்புறவுக்கும் ஏற்றவாறு ஒருவர் மற்றவரை அணுகுவதற்கும் அவர்களோடு பழகுவதற்கும் இதயத் தூய்மை வழிகாட்டுகிறது.

(க.தி.ம 2521)

தூய்மையான சிந்தனையுடைய மனிதன் சமூகத்தில் மாபெரும் சக்தியாக செயற்படுகின்றான். இறைவனுக்கு செவிகொடுக்கும் மனிதனுள் தூய சிந்தனைகள் உருவாக்கப்படுகின்றன. மனம் வருந்துதல் வழியாக தீய சிந்தனைகளை அழித்து விடலாம். இறையன்பினால் எமது எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி மனித மாண்பின் மேன்மையை வலுப்படுத்த முடியும்.

பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதோர், பிறர் மனைவி, அடிமை, அடிமைப் பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரிய எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

(விப. 20:17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காம இச்சை என்பது மனிதனின் ஆசை எனக் குறிப்பிடலாம். திருமணமான ஒருவருடன் முறையற்ற உறவில் ஈடுபடுவது ஒன்பதாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும். திருமண வாழ்வினுள் பாதுகாக்கப்பட வேண்டிய தூய்மைக்கு எதிரான அனைத்துச் செயல்கள் மற்றும் சிந்தனைகளிலிருந்து விலகி இருக்குமாறு ஒன்பதாம் கட்டளை எமக்குக் கற்பிக்கின்றது.

தாவீது அரசன் உரியாவின் மனைவி பத்சேபாவுடன் முறையற்ற உறவினை மேற்கொண்டு பிறர் தாரத்தின் மீது மோகம் கொண்டார். அது இறைவனுக்கு விரோதமான செயலானதால் அவருக்குத் தண்டனை கிடைத்தது. ஏரோது அந்திப்பாஸ் தன் சகோதரன் மனைவியாகிய ஏரோதியாவை திருமணம் செய்து அந்தப் பாவத்தைக் கட்டிக் கொண்டார். அப்பாவத்தை திருமுழுக்கு யோவான் சுட்டிக் காட்டினார்.

**தூய வாழ்வு வாழ்வதற்கு**

- அடுத்தவரை மதித்து வாழ்வோம்.
- அவர்கள் உரிமைகளைப் பாதுகாப்போம்.
- நேர்மையான சிந்தனையோடு பிறருக்கு உதவோம்.
- தூய வாழ்வு வாழ்வோம்.
- இறைவனுக்கு ஏற்புடைய செயல்களில் மட்டும் ஈடுபடுவோம்.
- எமது உடலைத் தூய ஆவியின் ஆலயமாக்குவோம்.

கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக் கொள்கின்றான்.

(நீதிமொழி 6:32)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையைப் பாதுகாக்க இறைவனுடைய துணையை வேண்டி மன்றாட வேண்டும். தனது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள பயிற்சி செய்தல் வேண்டும். இறை கட்டளைகளைப் பாதுகாத்து வாழ்ந்து ஒருவரை ஒருவர் மதித்து நல்வாழ்வு வாழ உதவ வேண்டும்.

## செயற்பாடு

1. தூய வாழ்வைக் கடைப்பிடிக்க நீர் செய்யக் கூடிய விடயங்கள் மூன்று தருக.

2. சமூகத்தை தூய்மைப்படுத்த நீர் முன்வைக்கும் மூன்று விடயங்கள் தருக.

## வாழ்க்கைக்கு

ஆண்டவரே தூயதோர் உள்ளத்தை என்னுள் வைத்தருளும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 தூய வாழ்வுக்கு முன்மாதிரிகை தூய மரிய கொறற்றி

## தூய மரிய கொறற்றி



20.1 தூய மரிய கொறற்றி

இவர் 1890 ஐப்பசி மாதம் 16 ந் திகதி பிறந்தார். இத்தாலியிலுள்ள கொறுனெல்டோ என்ற சிறிய கிராமத்தில் தனது பெற்றோருடன் வாழ்ந்தார். இவரின் தந்தை லுவிஸ் கொறற்றி, தாய் அசுந்தா கொறற்றி ஆவார். குடும்பத்தில் ஏழு பிள்ளைகளுள் மூன்றாவது பிள்ளை மரிய கொறற்றி ஆவார்.

ஏழ்மையானாலும் இக்குடும்பம் மிக மகிழ்ச்சியுடன் தினமும் இறைவனோடும் மரியன்னையோடும் மிக நெருங்கிய உறவில் வாழ்ந்து வந்தது. மரிய கொறற்றிக்கு ஆறு வயதான போது இவரின் குடும்பம் பிலியானோ என்ற பகுதியில் குடியேறியது.

தந்தையின் மரணத்திற்குப் பின் தனது அன்னையோடு வீட்டுப் பொறுப்புக்களை ஏற்ற மரிய கொறற்றி தனது சகோதர சகோதரிகளுடன் இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தாள். ஒருநாள் அவள் தனிமையாக வீட்டில் இருந்தபோது அங்கு வந்த அலெக் சாண்டோ அவளை ஆறாம் கட்டளைக்கு எதிரான பாவத்தை செய்யக்கட்டாயப்படுத் தினான். அதனை அவள் எதிர்த்தமையால் அவன் அவளை கத்தியால் குத்தினான். அவள் இறக்கும் முன் தனது தாயை விளித்து ''அம்மா நான் முதன் முறையாக நற்கருணை பெற்றபோது இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்துவிடமாட்டேன் என இயேசுவிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினேன்'' எனக் கூறினாள். இயேசு தன்னை சிலுவை மரத்தில் ஆணியால் அறைந்தவர்களை மன்னித்ததுபோல மரிய கொறற்றியும் அவள் இறக்கும் முன் தன்னை கத்தியால் குத்திய அலெக்சாண்டோவுக்கு மன்னிப்புக் கொடுத்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கும் போது அவளுக்கு வயது பன்னிரண்டு ஆகும். இன்று அவள் புனிதையாகக் கருதப்படுகிறாள். மரிய கொறற்றியின் திருநாள் ஆடிமாதம் 6ந் திகதி கொண்டாடப்படுகிறது.

நாமும் மரிய கொறற்றியைப் போல தூய்மையான வாழ்வு வாழவேண்டும். இறைதந்தையிடமிருந்து பெற்றுக்கொண்ட இறைவாழ்வை இழந்துவிடாமல் அவருக்கு உகந்தவாறு தூய்மையாக வாழவும், நம்பிக்கையுடன் இருக்கவும் எமக்காக இறை தந்தையிடம் பரிந்துபேசுமாறு மரிய கொறற்றியிடம் மன்றாடுவோம்.

## தூய அக்னெஸ்


20.2 தூய அக்னெஸ்

இவர் சிறுவயதிலிருந்து இறைவனிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்ததோடு கற்புடனும் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தவர். பன்னிரண்டாவது பிறந்த நாளைக்கொண்டாடிய இவர் பெற்றோருடன் திருப்பலிக்குச் சென்று நற்கருணையைப் பெற்றார். திருப்பலிக்குப் பின்பு ஆயரின் பாதத்தில் முழந்தாற்படியிட்டு தனது வாழ் நாள் முழுவதும் கன்னிமையை பாது காத்து தனது வாழ்க்கையை இயேசுவுக்கு அரிப்பணிப்பதாக கூறினாள். அன்று மாலை வேளையில் உரோமை ஆளுநனின் மகன் இவரை திருமணம் செய்யும் நோக்குடன் இவளுக்கு பெறுமதியான பரிசொன்றை அனுப்பிவைத்தான். இவள் அப்பரிசை ஏற்றுக்கொள்ளாமல் 'விண்ணுலக அரசரின் மகனாகிய இயேசுகிறிஸ்துவை திருமணம் செய்துள்ளேன்' எனக் கூறினாள். கோபங்கொண்ட அவன் அவளை சிறையிலிட கட்டளையிட்டான்.

உரோமை படைவீரர் அவளை இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர். அங்கு பொய்க்கடவுளின் சிலைகளுக்கு பூவும் தூபமும் காட்டி வணங்குமாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயப்படுத்தினர். அக்னெஸ் மிகவும் உறுதியுடன் இயேசுவிடம் மனதையும் கரங்களையும் உயர்த்தி செபத்தில் ஈடுபட்டாள். படைவீரர்களுக்கு கீழ்படிய மறுத்தாள். ஆளுநனின் மகன் அவளை துன்புறுத்தல்களிலிருந்து விடுவிப்பதாக உறுதிமொழி அளித்து தன்னை திருமணம் செய்யுமாறு திரும்பவும் கேட்டுக்கொண்டான். அதற்கு அக்னெஸ் ''எனது மீட்பாராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே நான் சொந்தமானவள்'' என பதிலளித்தாள். அவளின் வார்த்தைகளைக் கேட்ட அவன் கோபங்கொண்டு அவளுக்கு மரணதண்டனை வழங்குமாறு கட்டளையிட்டான்.

தைரியமுள்ள இளம் புனிதையின் முன்னால் இருந்த படைவீரன் அவளை வாளால் வெட்டிக் கொலை செய்தான். அவள் இறுதிவரை இயேசுவுக்கு பிரமாணிக்கமாய் இருந்தாள்.

அவளின் உடலை உரோமைக்கு வெளியே அவளின் குடும்ப கல்லறையில் அடக்கம் செய்தனர். இன்று அது அவள் பெயர் கொண்ட கல்லறையாக இருக்கிறது.

தைமாதம் 21ந் திகதி திருச்சபை இப்புனிதையின் திருநாளைக் கொண்டாடுகிறது.

### தூய டொமினிக் சாவியோ

இவர் தூய ஜோன் பொஸ்கோவின் முதன்மை மாணவருள் ஒருவராவர். இவர் 1842 சித்திரை மாதம் 2ந் திகதி இத்தாலியிலுள்ள முர்தான நகரில் அமைந்துள்ள முரிஅல்டோ கிராமத்தில் பிறந்தார். இவரின் தந்தை சாள்ஸ் சாவியோ, தாய் பிறிஜட் ஆவார். டொமினிக் குழந்தை பருவத்தை வீட்டிலேயே கழித்தார். இறைவனின் ஒளியையும் அருளையும் பெறுவதற்குப் பாக்கியம் பெற்றவர். இவரின் பங்குத் தந்தை ஜோன் அடிகளார் இவரின் மனதில் இறைவன்பால் மிகுந்த அன்பும் மரியன்னை மீது ஆழ்ந்த பக்தியும் வளர்வதற்கு உதவிபுரிந்தார்.

டொமினிக் சாவியோ ஆண்பிள்ளைகளினதும் முதல் நன்மை பெறும் பிள்ளைகளினதும் பாதுகாவலராவார். ஏழு வயதிலிருந்தே தினந்தோறும் நற்கருணையைப் பெறுவதற்கு பங்குத் தந்தையிடம் கேட்ட போதும் பன்னிரண்டு வயது வரை காத்திருக்கும்படி பங்குத்தந்தை பதிலளித்தார். அவரின் பக்தியையும் ஆவலையும் கண்ட பங்குத்தந்தை ஒரு நாள் அவரிடம் ''பாஸ்காவிற்கு உங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான பரிசொன்றைத் தருவேன்; அன்று நான் உங்களுக்கு முதன்முறையாக நற்கருணை மூலம் இயேசுவைத் தருவேன்'' என்றார். இது டொமினிக்குக்கு மிக மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது. இச் செய்தியை பெற்றோருக்கும் அறிவித்தார். அதன்பின் தினந்தோறும் மிக பக்தியுடன் நற்கருணைப் பெற்றார்.


20.3 தூய டொமினிக் சாவியோ

இவர் ஜோன் பொஸ்கோ குழுமத்தில் இணைந்து கொண்டார். அங்கிருந்த பிள்ளைகளுக்கு உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு வார்த்தையாலும் செயலாலும் அவர் முன்மாதிரியாக இருந்தார். அவர் கடுமையாக நோயுற்றார். சிகிச்சை பெறுவதற்காக அவர் பெற்றோரிடம் அனுப்பப்பட்டார். தமது இல்லத்தில் தொடர்ந்தும் தூய்மையான செபவாழ்வில் வாழ்ந்தார்.

1857 பங்குனி ஒன்பதாம் திகதி அவர் இறக்கும் தருணத்தில் அழகான காட்சியொன்றைக் கண்டு உரத்த குரலில் இவ்வாறு கூறினார். ''ஆ எவ்வளவு அழகான காட்சி எனக்கு இப்போது தெரிகிறது''

தூய டொமினிக் சாவியோவிடம் செபித்த கர்ப்பிணி அன்னையருக்கு சுகபிரவசத்திற்கு உதவினார் என்பது பல சந்தர்ப்பங்களில் நிருபிக்கப்பட்டுள்ளது. தூய டொமினிக் சாவியோவின் திருநாள் பங்குனி 10 ந் திகதி கொண்டாடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. ''தூய்மையான வாழ்வின் முன்மாதிரிகை'' என்ற தலைப்பில் பத்திரிகைக்குக் கடிதமொன்றை தயாரிக்குக.

2. தூய்மையான வாழ்வு வாழ்வதற்கு செய்யவேண்டியவைகள் மூன்று எழுதுக.

## வாழ்க்கைக்கு

நாம் எவ்வேளையிலும் பிறரின் நன்மைக்காக எம்மை அர்ப்பணிப்போம். இயேசுவை அன்பு செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 கேளுங்கள் கொடுக்கப்படும்

**தச்சன் அந்தோணி** : ஐயோ பாதர் மூன்று நான்கு மாதங்களாக எனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. எப்படி வாழ்வதென்று எனக்குத் தெரியவில்லை.

**குருவானவர்** : நீங்கள் பக்தியுள்ள கத்தோலிக்கர் தினமும் இறைவனிடம் செபிப்பவர். இறைவனில் மிகவும் நம்பிக்கையுள்ளவர். நம்பிக்கையை இழக்காமல் உங்கள் தேவைகளை இறைதந்தையிடம் கேளுங்கள். அவர் உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவார். நானும் என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்.

***(வீட்டுக்கு வந்த தச்சன் அந்தோனியிடம்)***

**மரியா** : பெரிய சுவாமி என்ன சொன்னார்?

**தச்சன் அந்தோனி** : எதிர்நோக்கை இழக்காமல் தொடர்ந்து இறைதந்தையிடம் செபிக்குமாறு சுவாமி கூறுகிறார்.

**மரியா** : கத்தோலிக்க ஆலயத்திலிருந்து விலகி அவர்களின் சமயத்திற்கு வந்தால் ஒரு லட்சம் பணம் தருவதாக பைபிள் சபையின் பாஸ்டர் கூறினார். ''நாங்கள் சேவை செய்வது ஒரே இறைவனுக்கு மாத்திரமே பசியால் இறந்தாலும் சமயத்திலிருந்து மாறமாட்டோம்'' என நான் கூறினேன்.

**தச்சன் அந்தோனி** : சமயத்தை விற்கின்றவர்களுடன் சென்று நாம் நரகத்திற்குப் போக அவசியமில்லை. நாம் இறைதந்தையிடம் நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்போம். தொடர்ந்து செபிப்போம். எமக்கு ஒரு குறையும் வராது.

(ஒரு நாள் அந்தோணியைத் தேடிக்கொண்டு அப்பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் சுகுமார் வருகிறார்.)

**சுகுமார்** : எனக்கு கூடிய சீக்கிரம் 500 மேசைகளும், 500 கதிரைகளும் செய்ய வேண்டும். மொறட்டு முல்லையிலுள்ள திறமையான தச்சர் நீர் என்பது எனக்குத் தெரியும். இதை செய்து தர உம்மால் முடியுமா?

**தச்சன் அந்தோனி** : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நான் அந்த வேலையைப் பொறுப்புடன் சீக்கிரமாகச் செய்து தருகிறேன்.

**சுகுமார்** : நல்லது. நீங்கள் இந்த வேலையைச் செய்து தந்தால் உங்களுக்கு ஐந்து லட்சம் பணம் தருவேன். இப்போது முற்பணமாக இரண்டு லட்சம் பணம் தருகிறேன். வேலை நடைபெறுவதைப் பார்த்து மிகுதி பணத்தைத் தருவேன். சம்மதமா?

**தச்சன் அந்தோனி** : நான் செய்து தருகிறேன் ஐயா.

(சுகுமார் முற்பணமாக இரண்டு லட்சம் பணத்தை அந்தோனியிடம் கொடுக்கிறார். அன்று மாலை அந்தோனி பெரிய சுவாமியை சந்தித்து அதில் ஒரு தொகையை அவரிடம் கொடுக்கிறார்)

**தச்சன் அந்தோனி** : இப்பணத்தை ஆலயத்தின் தேவைக்காகப் பயன்படுத்துங்கள். எனக்கு ஐந்து லட்சத்திற்குரிய வேலையொன்று கிடைத்தது. இறைதந்தையைப் புறக்கணிக்காமல் நம்பிக்கையுடன் செபித்ததால் எனக்கு பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. இறைவனுக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலியாவின் செபம்

எலியா இறைவாக்கினார் கார்மேல் மலைமீது பலிபீடம் அமைத்தார். எலியா இறைவாக்கினரும் பாகாலின் பொய் வாக்கினரும் இரண்டு பலிகளை ஆயத்தம் செய்தனர். உண்மைக் கடவுள் நெருப்பை அனுப்பி பலியை எரிக்கட்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. எலியாவின் சொற்படி பாகாலின் பொய்வாக்கினர் தாங்கள் கட்டிய பலிபீடத்தைச் சுற்றியிருந்து பாகாலின் பெயரைக் கூப்பிட்டனர். ஆனால் அவர்களின் பலி நெருப்பினால் சுட்டெரிக்கப்படவில்லை. பின் எலியா விறகின் மீதும் எரிபலியின் மீதும் நீரை ஊற்றி இறைவனிடம் இவ்வாறு வேண்டினார்.

"ஆபிரகாம், ஈசாக்கு, இஸ்ரயேல் என்பவர்களின் கடவுளாகிய ஆண்டவரே! இஸ்ரயேலின் கடவுள் நீரே என்றும், இவற்றையெல்லாம் நான் உம் வாக்கின் படியே செய்தேன் என்றும் இன்று விளங்கச் செய்தருளும். நீரே கடவுளாகிய ஆண்டவர் என்றும் நீரே இம்மக்கள் அறியும்படி எனக்குப் பதில் தாரும்" என்றார்.

உடனே ஆண்டவரின் நெருப்பு கீழே இறங்கி அந்த எலிபலியையும், விறகுக் கட்டைகளையும், கற்களையும், மணலையும் சுட்டெரித்து வாய்க்கால் நீரையும் வற்றச் செய்தது.

1 அரசர் 18 : 36 - 38

இந்த நிகழ்வினால் உண்மை கடவுள் யாரென்பது வெளிப்படுத்தப்பட்டது.

கார்மேல் மலையில் செய்த எரிபலி முடிவடைந்தவுடன் வரட்சி நீங்கி மழை பெய்தது. இறைவனில் நம்பிக்கை வைப்போரை அவர் பாதுகாப்பார். அவர்களின் தேவைகளின் போது உதவுவார். ஆதலால் நாமும் அன்றாட வாழ்வில் சந்திக்கும் துன்ப துயரங்களின் போது உறுதியான நம்பிக்கையுடன் இறைவனை நோக்கி செபிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய யோசேப் வாஸ் அடிகளார் செபத்தினால் மழை பெய்யச் செய்தல்



படம் 21.1 தூய யோசேப்வாஸ் அடிகள் கண்டியில் செபம் செய்தல்

இரண்டாம் விமலதர்மசூரியன் அரசன் காலத்தில் தூய யோசேப்வாஸ் அடிகள் கண்டியில் சிறைக்கைதியாக இருந்தார். அக்காலத்தில் மழையின்றி கடும் வரட்சி ஏற்பட்டதால் கண்டியிலும் அதனை சுற்றியிருந்த கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர். விளைச்சல் முழுவதும் அழிந்தன. குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாமற் போயிற்று. இதற்காக பௌத்தரும் வேறு சமயத்தினரும் தங்கள் வழக்கப்படி சமய சடங்குகளைத் தொடர்ந்து செய்தும் மழை பெய்வதற்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. இறுதியாக அரசன் தூய யோசேப்வாஸ் அடிகளின் உதவியை நாடினான். தூய யோசேப்வாஸ் அடிகள் அரண்மனை முற்றத்திலுள்ள சதுக்கத்தில் ஒரு பீடத்தை அமைத்து அதன் மேல் ஒரு சிலுவையை வைத்து முழந்தாற்படியிட்டு மிகவும் பக்தியுடன் செபித்தார். சிறிது நேரத்தில் வானம் கறுத்து கடும் மழை பெய்யத் தொடங்கியது. ஆனால் தூய யோசேப்வாஸ் அடிகளும் பீடமும் மழையினால் நனையவில்லை.

நம்பிக்கையோடு வேண்டும்போது புதுமைகள் நடைபெறுகின்றன. ஆதலால் நாமும் நம்பிக்கையுடன் தினமும் செபத்தில் ஈடுபடவேண்டும். வேண்டுதலினால் நாம் பெறும் அனுபவத்தின் மூலம் பிறரையும் நம்பிக்கையுடன் செபத்தில் ஊக்குவிப்பது எமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. இறைவாக்கினரான எலியா கார்மேல் மலையில் செய்த செபத்தினால் உமது வாழ்க்கைக்குப் பெறக்கூடிய வழிகாட்டல்கள் இரண்டு எழுதுக.

2. உமது மன்றாட்டு கேட்கப்பட்ட சந்தர்ப்பமொன்றை சுருக்கமாக விபரிக்குக.

3. நம்பிக்கை இழந்த உமது நண்பனின் விசுவாசத்தை வளர்க்க நீங்கள் கூறும் அறிவுரையை சுருக்கமாக விபரிக்குக.

## வாழ்க்கைக்கு

நம்பிக்கையுடன் உங்கள் தேவைகளை இறைவனிடம் கேளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 நல்லதையே வேண்டுவோம்

இவ்வுலகில் பிறந்து திருமுழுக்கினால் கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் இரண்டு வாழ்வுக்கு உரிமையாகிறோம். அவை உலக வாழ்வும் மறு உலக வாழ்வும் ஆகும். உலக வாழ்வு குறுகியது. மறு உலக வாழ்வு நிரந்தரமானது. நித்திய வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள உலகவாழ்வில் நன்மைகளைச் செய்ய வேண்டும். நாளாந்த வாழ்விலும், நாம் வேண்டும்போதும் எமது நலனுக்காகவும், பிறரின் நலனுக்காகவும் செபிக்க வேண்டும். திருவிவிலியமும் நன்மைக்காக வேண்டுதல் தொடர்பாக நமக்கு கற்பிக்கிறது.

## சாலமோன் அரசனின் செபம்



22.1 படம் சாலமோன் அரசன்

கிபயோனில் ஆண்டவர் இரவில் சாலமோன் அரசனுக்குக் கனவில் தோன்றி ''உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றார். அதற்கு சாலமோன் அரசன் ''உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்'' எனக் கேட்டார். (1 அரசர் 3 : 9) சாலமோன் அரசன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாய் இருந்தது. ஞானமும், பகுத்தறிவும், செல்வமும், புகழும் உனக்குத் தருவேன் என ஆண்டவர் கூறினார். தீமையிலிருந்து நன்மையை பகுத்தறியவும் சரியானதைத் தெரிவு செய்யவும் சக்தியையும் வழங்குமாறு இறைவனிடம் வேண்டுவது முக்கியமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இதன்மூலம் உறுதியாகிறது. அதுபோல் இறைவனை விட்டு விலகி தனிமையாகும் போது தீமைகள் ஏற்படும் என்பதையும் ஞாபகப்படுத்துகிறது. மனிதன் பாவத்திலிருந்து விலகும்போது அவனது தேவைகள் அனைத்தையும் இறைவன் நிறைவேற்றுவாரென இதன்மூலம் எமக்கு கற்பிக்கிறது.

''கேளுங்கள், உங்களுக்குத் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாம் பெற்றுக் கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா''

(மத்தேயு 7 : 7 - 11)

நல்லதை நாம் உலக ரீதியாக அல்ல, ஆன்மீக ரீதியாகப் பார்க்க வேண்டும். நீங்கள் பிறருக்காக வாழும்போதுதான் உங்கள் வாழ்வும் அர்த்தமுள்ளதாகிறது. பிறருக்காக வாழவும், பிறரை மகிழ்விக்கவும் நல்ல மனநிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நன்மையை செய்து நாம் இறை உறவில் நெருக்கமாக வளர முயற்சி செய்ய வேண்டும். ஒருவன் உலக சுகபோகத்தின் மூலம் நன்மையைத் தேடினால் சிலவேளையில் அவன் அழிவை நோக்கிப் பயணிக்க நேரிடுகிறது. ஏனெனில் உலக செல்வங்கள் கிடைப்பதினால் இறைவனைவிட்டுத் தூர விலகிச் செல்லும் சந்தர்ப்பமும் உண்டு. இதனால் நல்லது எதுவெனத் தீர்மானிப்பது இறைவனேயாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. இறைவனிடம் வேண்டுவோருக்கு நல்லதையே செய்வார் என்பதை உறுதிப்படுத்த இயேசு கூறிய உவமைகள் இரண்டு எழுதுக.

2. சாலமோன் அரசன் இறைவனிடம் செபித்த செபத்திலிருந்து உமது வாழ்க்கைக்குப் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் இரண்டு எழுதுக.

3. ''நாம் நல்லதைக் கேட்டுச் செபித்தாலும் இறைவன் எமது வேண்டுதல்களை நிறைவேற்றுவதில்லை'' எனக் கூறும் உமது நண்பனைத் தைரியப்படுத்தி திரும்பவும் செபத்தில் ஈடுபடுத்தும் முறையை 50 சொற்களளவில் விபரிக்குக.

## வாழ்க்கைக்கு

எப்போதும் நல்லவற்றையே இறைவனிடம் கேட்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 புகழ்பாக்கள்



23.1 படம் மரியன்னை

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே பெண்களுள் பேறுபெற்றாய் நீ உம்முடைய திருவயிற்றின் கனியுமான இயேசுவும் ஆசீர் அருளப் பெற்றவர்.
புனித மரியாயே இறைவனின் தாயாரே பாவிகள் எங்களுக்காக இப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் மன்றாட வேண்டுமம்மா.

1. மேலுள்ள பாடல் எந்நிகழ்வுடன் தொடர்புடையது?
2. இப்பாடலில் கூறப்படுவது என்ன?

இறைவனிடம் அருள்மிகப் பெற்றவர்கள் மகிழ்ச்சியினால் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் மூன்றினைப் புதிய ஏற்பாட்டில் காணலாம்.

**1. மரியாவின் பாடல் (லூக்கா 1 : 46-55)**

மரியாள் எலிசபெத்தைச் சந்திப்பதற்காகச் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு மரியாவைப் புகழும்போது மரியா பின்வருமாறு பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என்மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது. ஏனெனில் அவர்தம் அடிமையின் தாழ் நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்; உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்து கிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர் தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்.

லூக்கா 1.46-55

**2. செக்ரியாவின் பாடல் (லூக்கா 1.68-79)**

பேசமுடியாதிருந்த செக்கரியா திருமுழுக்கு யோவானின் பிறப்புடன் பேச்சாற்றலைப் பெற்று இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்.

இஸ்ரேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார். தம் தூய இறைவாக்கினர் வாயினால் தொடக்க முதல் அவர் மொழிந்தபடியே அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார். நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார். அவர் தம் மூதாதையாருக்கு இரக்கம் காட்டி தமது தூய உடன்படிக்கையும், நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவு கூர்ந்தார். இவ்வாறு நாம் பகைவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தூய்மையோடும் நேர்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்ச மின்றி அவர் திருமுன் பணிசெய்யுமாறு வழிவகுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்; ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய். இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது.

(லூக் : 68 - 79)

### 3. சிமியோனின் பாடல் (லூக்கா 2.29-32)

குழந்தை இயேசு தொடர்பாக திருச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சடங்குமுறைகளை நிறைவேற்ற அவரது பெற்றோர் அவரை எருசலேம் ஆலயத் திற்குள்ளே கொண்டு வந்தபோது சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றினார்.

ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை.

(லூக் 2 : 29 - 32)

கிறிஸ்தவர்களாகிய நாமும் நாளாந்த செபத்தின் மூலம் இறைவனைப் புகழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் காணப்படும் மகிழ்ச்சி நிறைந்த புகழ்பாக்கள் மூன்றினைப் பெயரிடுக.
2. மரியாவின் பாடலில் காணப்படும் செய்தி என்ன?
3. ''மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் இறைவனைப் புகழ வேண்டும்'' இக்கூற்றை விபரிக்குக.

## வாழ்க்கைக்கு

நாம் எம் வாழ்வில் மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் இறைவனைப் புகழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 செபத்தின் வகைகள்



24.1 படம் இறைவனிடம் செபித்தல்

செபம் என்பது மனிதனின் வேண்டுதல்களை இறைவனிடம் சமர்பிக்கவும், இறைவனின் விருப்பத்தை மனிதன் புரிந்துகொள்ளவும் நடைபெறும் உரையாடலாகும். செபத்தின் மூலம் இறைவனோடு ஆழ்ந்த உறவைக் கட்டியெழுப்ப முடியும். கிறிஸ்தவ செபமரபில் செபத்தின் மூன்று வகைகள் உள்ளன.

## 1. வாய்மொழிச் செபம்

வாய்மொழி அல்லது மனதால் சொல்லும் செபங்கள் இதில் அடங்கும். உதாரணம் - தூய பிரான்சிஸ் அசீசியாரின் செபம், கர்த்தர் கற்பித்த செபம்.

எமது வேண்டுதல்கள் செவிசாய்க்கப்பட்டதா, இல்லையா என தீர்மானிக்கப் படுவது நாம் சொல்லும் வார்த்தைகளின் அளவைப்பொறுத்தன்று. நமது ஆன்மாவிலுள்ள ஆர்வத்தைப் பொறுத்தேயாகும். வாய்மொழி இறைவேண்டல் கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கிய அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தமது சீடர்களுக்கு "பரலோக மந்திரம்" என்ற வாய்மொழி இறைவேண்டலைக் கற்பித்தார். வாய்மொழி இறைவேண்டல் குழுக்களில் மிக இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய செபமுறையாகும்.

*(க.தி.ம 2700 - 2704)*

## 2. தியானம்

தியானம் என்பது தேடலாகும். இந்த தேடலின் போது இரண்டு விடயங்கள் தொடர்பாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

1. கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம்
2. கிறிஸ்தவ வாழ்வை வாழவேண்டிய முறை

இறைவன் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்புகளை அறிந்து அவற்றுக்குப் பதிலளிக்கிறார் என்பதாகும்.

நாம் வாசிக்கும் இறைவார்த்தையை தியானிப்பதன் மூலம் அவற்றை நமது வாழ்வின் மையமாக்கிக்கொள்ளவேண்டும். நாம் தாழ்ச்சி, உண்மையுள்ளவர்களாக இருக்கும் அளவிற்கு தியானத்தின் மூலம் நமது உள்ளத்தை வருத்தும் நிகழ்வுகளை அறியவும் அவற்றை சரிவர விளங்கிக்கொள்ளவும் முடிகிறது. தியானமுறையானது ஒரு வழிகாட்டி மாத்திரமேயாகும். தூய ஆவியுடன் ஒன்றித்து செபத்தில் நிலைத்திருப்பதே முக்கியமானதாகும். இதற்கு இயேசுக் கிறிஸ்து உன்னத மாதிரியாகவுள்ளார். திருச்சபையின் செபங்களிலும், செபமாலை செபித்தலிலும், கிறிஸ்தவ செபங்களிலும் கிறிஸ்தவின் மறைபொருளை தியானிப்பதே முக்கியமானதாகும்.

*க.தி.ம 2705 - 2708*

## 3. ஆழ்நிலைத் தியானம்

தியானத்தில் உயர்நிலைக்கு வந்தவர்கள் மாத்திரமே ஆழ்நிலைத் தியானம் செய்ய முடியும். வாய்மொழி இறைவேண்டல் ஆழ்நிலைத் தியானத்திற்கு முதற்படியாகும். தூய திரேசா இதைப்பற்றி இவ்வாறு கூறுகிறார். "எனது கருத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்படி ஆழ்நிலை தியானம் என்பது நெருங்கிய நண்பரிடையே கருத்துப் பகிர்வு போன்றதாகும்'' அதாவது எம்மை அன்பு செய்யும் இறைவனோடு எந்நேரமும் மிக நெருக்கமாக ஒன்றிப்பதற்கு நேரத்தை அமைத்துக் கொள்வதாகும்.

ஆழ்நிலைத் தியானம் என்பது இயேசு கிறிஸ்துவை நம்பிக்கையுடன் உற்றுநோக்குவதாகும். இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதாகும். அமைதியான அன்பாகும். கிறிஸ்துவின் மறைபொருளில் பங்கேற்குமளவிற்கு அவரின் வேண்டுதலிலும் உண்மையாக ஒன்றிணைகிறோம்.

(க.தி.ம 2709 - 2719)

கிறிஸ்தவர்களாகிய நமது ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு செபத்தின் வகைகள் உதவுகின்றன. அதில் முறையாக பங்குபற்றுவது முக்கியமானதாகும். ஆன்மீகச் சுகத்தை பெறுவதற்குப் பங்கில் ஏற்பாடு செய்யும் செபவழிபாடுகளில் பங்குபற்றி ஒத்துழைக்க வேண்டும்.

## தூய பிரான்சிஸ் அசிசியாவினன் செபம்



24.2 அசீசிய தூய பிரான்சிஸ்

ஆண்டவரே!

என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும் வெறுப்புள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்தில் மன்னிப்பையும், ஐயமுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், துன்பம் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் நான் விதைத்திட அருள்புரியும்.

ஆறுதல் தேடுவதைவி ஆறுதல் அளிக்கவும், பிறரால் புரிந்து கொள்ளப் படுவதைவிட பிறரைப் புரிந்து கொள்ளவும், அன்பு செய்யப்படுவதை விட அன்பு செய்யவும் எனக்கு அருள்புரியும். ஏனெனில் தருவதில்தான் நாங்கள் பெறுகிறோம். மன்னிப்பதில்தான் மன்னிக்கப்படுகிறோம். மரிப்பதில்தான் முடிவில்லா வாழ்வுக்குப் பிறக்கிறோம். ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1.கிறிஸ்தவ மரபில் இறைவேண்டலின் வகைகள் இரண்டைப் பெயரிடுக.

2. வாய்மொழி இறைவேண்டல் மூலம் கற்பிக்கப்படுவது என்ன?

3. தியானத்தின் வழியாக நடைபெறும் செயல்கள் இரண்டு என்ன?

4. கிறிஸ்தவரின் ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு செபத்தின் வகைகள் உதவும் முறையை சுருக்கமாக விபரிக்குக.

## வாழ்க்கைக்கு

உமது பங்கில் ஒழுங்குசெய்யும் செபவழிபாடுகளில் பங்குபெறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிப்பா




ஆசிப்பா (ASIPA) என்பது "ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை" என்பதாகும். (Asian Intergral Pastoral Approach)

## வரலாறும் பின்னணியும்

கி.பி 1990 ம் ஆண்டில் இந்தோனேசியாவிலுள்ள பாண்டுங் நகரில் ஆசியாவைச் சார்ந்த 400 ஆயர்கள் பங்குபற்றிய 5 வது ஆசிய ஆயர் பேரவையில் "ஆசிப்பா" உருவானது. ஆசிய நாடுகளின் ஆயர் ஒன்றியத்தின் (குழு செபம்) ஆழ்ந்த தியானத்தின் பலனாக ஆசிப்பா உருவானது.

ஆசிய கத்தோலிக்க திருச்சபையில் உதாசீன நிலையிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுநிலையினரின் தலைமைத்துவத்திற்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை வழங்கவும், கிறிஸ்தவ குழுமங்களில் இறைவார்த்தையை வாசிக்கவும், அதை நடைமுறைப்படுத்தவும் உள்ள தேவை உணரப்பட்டது.

பங்குகளில் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை ஏற்படுத்துவதன் மூலம் இச்செயற்பாட்டைச் சிறப்பான முறையில் நிறைவேற்றலாம் என அறிந்தனர். அதனால் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்ட சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் அமைக்கப்பட்டன.

சிறிய கிறிஸ்தவ குழுமங்களில் நற்செய்திப் பகிர்வு ஏழு படிமுறைகளில் நடைபெற்றன. அதனால் அது நற்செய்திப் பகிர்வின் ஏழு படிமுறைகள் என அழைக்கப்பட்டன.

**இடத்தை ஆயத்தம் செய்தல்**

- ஆசிப்பா செயற்பாட்டை செய்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல்.
- அவ்விடத்தில் மேசையொன்றை வைத்து அதன் மேல் வெள்ளைத் துணியை விரித்தல்.
- மேசையில் திருவிவிலியத்தை அரங்கேற்றம் செய்தல் (வாசகத் தண்டில் வைப்பது போல)
- திருவிலியத்தின் முன்னால் விளக்கை ஏற்றி வைத்தல்.
- சிறிய குழுவாக வட்டமாக அமருதல்.

**ஏழு படிமுறைகள்**

**முதலாம் படிமுறை : நாம் இறைவனை வரவேற்போம்.**

செப மனநிலையில் இறைவார்த்தையை நினைவு கூர்ந்து, கூடியிருக்கும் எம் மத்தியில் கிறிஸ்து பிரசன்னமாக வேண்டுமென அவரை அழைப்பதற்கு செபிக்க சிலரை அழைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம்**

- அன்று மார்த்தா, மரியா இல்லத்திற்கு வந்தது போல இவ்வேளையில் எம்மத்தியில் வந்தருளும்.
- சக்கேயுவின் இல்லத்திற்கு வந்தது போல எம்மத்தியில் வந்தருளும்.
- வழியும், உண்மையும், வாழ்வும் நானே என கூறிய இயேசுவே எம்மத்தியில் வந்தருளும்.

**இரண்டாம் படிமுறை : நாம் இறைவார்த்தையை வாசிப்போம்.**

- தூய.......... எழுதிய நற்செய்தியில்........ அதிகாரத்தை எடுங்கள் (இதை இருமுறை கூறுங்கள்)
- அவ்வதிகாரத்தில் இறைவார்த்தை............ தொடக்கம்.......... வரை எடுங்கள்.
- குறிப்பிட்ட வேதாகம வசனத்தை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்க இருவர் அல்லது மூவருக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

**மூன்றாம் படிமுறை : உள்ளத்தைத் தொட்ட வார்த்தையை அல்லது வசனத்தைத் தியானிப்போம்.**

- செவிமடுத்த வேதாகம பகுதியில் உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை தனது குழுவிற்கு கேட்குமாறு மூன்று முறை கூறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

**நான்காம் படிமுறை : அமைதியில் இறைவன் எம்மோடு உரையாடுவதற்கு இடமளிப்போம்.**

- மூன்று நிமிடங்கள் அமைதியாகத் தியானித்து இயேசு பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

**ஐந்தாம் படிமுறை : நாம் பெற்றுக்கொண்ட செய்தியைப் பகிர்ந்து கொள்வோம்.**

- தாங்கள் தெரிவுசெய்த வார்த்தையினால் பெற்ற செய்தியை குழுவுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியவருக்கு இடமளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறாம் படிமுறை : கிறிஸ்தவ குழுமத்திற்குரிய பணிகளைப்பற்றி கலந்துரையாடுவோம்.**

- அடுத்துவரும் வாரத்தில் ஒருவரின் தேவையை அறிந்து, உதவி செய்யக்கூடிய முறையைப் பற்றி கலந்தாலோசிக்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அதில் மிகமுக்கியமான செயற்பாட்டை குழுவில் கலந்துரையாடி அதை நடைமுறைப்படுத்த வழிநடத்துங்கள்.

**ஏழாம் படிமுறை : நாம் நன்றி கூறிச் செபிப்போம்.**

- இவ்வேளையில் எம்மோடு இருக்கும் இயேசுவுக்கு நன்றி கூறி செபிப்பதற்கு சிலரை அழையுங்கள். (இங்கே விசுவாசிகளின் மன்றாட்டைப் போல எமது வேண்டுதல்களை முன்வைக்கலாம்)

**செயற்பாடு**

1. ஆசிப்பா என்பதன் கருத்து என்ன?
2. ஆசிப்பா எப்போது, எங்கே, ஆரம்பமானது?
3. ஆசிப்பா எதற்காக ஆரம்பிக்கப்பட்டது?
4. ஆசிப்பா முறையை வகுப்பில் குழுவாக செயற்படுத்துங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்கு

தேவைகள் இருப்போருக்கு நற்செயல்களினால் உதவ முன்வருவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

**பாடநூல் மீள்பாவனைக்கான செயற்றிட்டம் - 2018**

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படியுங்கள்.

பாடசாலையின் பெயர் :- ..............................................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2018 | ........................ | ........ | ........ |
| 2019 | ........................ | ........ | ........ |
| 2020 | ........................ | ........ | ........ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



කතෝලික ධර්මය (දෙ) 9 ශ්‍රේණිය

2018/T/9/131/12,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E:P:D: (SALES DIVISION)
1020204
CATHOLICISM G09 (T) (NEW)
Rs.310.00